

சிறுகதை மாதஇதழ்

# மஞ்சரி

25

ஆசிரியர்: மு.தயாளன்

இதழ் 25 ஆவணி 2022 £4.00

வளர்ந்த, வளரும் படைப்பாளிகளுக்கான களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்காளர்கள்







வசந்த தீபன் பக்கம் 3 — இலங்கை

நடராசா பார்த்திபன் பக்கம் 8 — இலங்கை

க. தனுசியா பக்கம் 10 — இலங்கை

கு.குணறுபேஸ் பக்கம் 12 — இலங்கை

என்.நஜ்முல் ஹுசைன் பக்கம் 18 — இலங்கை







து. மதனரூபி பக்கம் 20 — இலங்கை

ஆர்த்திகா சுவேந்திரன் பக்கம் 22 — இலங்கை

அலெக்ஸ் பரந்தாமன் பக்கம் 29 — இலங்கை

பேராசிரியர் யோகராசா பக்கம் 31 — இலங்கை



20 % கழிவு

## SKM BOOKS FOR SALE

20 % கழிவு




300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 200 ரூபா 300 ரூபா 350 ரூபா




200 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 400 ரூபா

எனது எல்லாப்புத்தகங்களும்
சிறுகதை மஞ்சரிகளும்
Amazon Kindle இல் உள்ளன.
www.amazon.co.uk இல்
Type M.Thayalan

India 400 Rs
London £5 Can/Ame $10
Europe 10 Euro
மேற்குறிப்பிட்ட விலைகளிலிருந்து
20% கழிவில் பெறலாம்

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை skmbooks50@gmail.com
இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்


**வாசிப்பதனால் மனிதன் பூரண மனிதனாகிறான்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A-KUGAN
72, 2nd LANE
ANANDAPURI
TRINCO
0771960160



# புரட்சி – கிளர்ச்சி – ஆர்ப்பாட்டம்

இலங்கை இன்று கையறு நிலையிலுள்ளது. மீகாமன் இல்லாத கப்பல் போன்றுள்ளது. மக்கள் வீதிக்கு வந்துவிட்டார்களென்றும் மக்கள் புரட்சி வெற்றி பெற்றுவிட்டதென்றும் குழந்தைத் தனமாக வசனங்கள் பேசப்படுகின்றன.

இன்று இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருப்பது புரட்சியா கிளர்ச்சியா ஆர்ப்பாட்டமா என்ற ஐயம் பலரிடமுள்ளது.

அரசு அதிகாரத்தின் கரங்களைப்பற்றிக் கொண்டிருந்த ராஜபக்ச குடும்பம் இலங்கையின் பொருளாதாரத்தை வீழ்த்திவிட்டார்கள் என்று பலமாக எதிர்க்கட்சிகளால் எழுப்பப்பட்டு பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. தமிழினக் கொலைகளையே தங்களின் கோசமாகக் கொண்டிருந்த அதிகார வர்க்கம் வீழ்த்தப்படாத அளவுக்குப் பலம் கொண்டிருந்ததை புரிந்து கொண்டிருந்த எதிர்க்கட்சிகள் அவர்களை வீழ்த்துவதற்காக உருவாக்கப்பட்ட கோசமே பொருளாதார வீழ்ச்சி எனும் கோசம். உண்மையில் ராஜபக்ச குடும்பத்தால் பொருளாதாரம் வீழ்த்தப்படவில்லை. 5 வருடங்களுக் கொருமுறை கதிரைகளைக் கட்டிப்பிடிக்கும் எல்லா அதிகார வர்க்கத்தினரின் இயலாமையும் சுயநலமும் தூர நோக்கின்மையுமே பொருளாதார வீழ்ச்சிக்கான காரணமாகும். ராஜபக்ச குடும்பத்தினர் வெறும் பலிக்கடாக்கள்தான்.

இவர்களுக்கெதிராகத் தூண்டிவிடப்பட்ட இளைஞர்கள் வெளியே கொண்டுவரப்பட்டு ஆர்ப்பாட்டம் செய்ய வைக்கப்பட்டார்கள். அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யும் இடம் சொர்க்கபுரியாக மாறியது. நேரத்திற்கு உணவு - உடற்பயிற்சி செய்ய வசதிகள் - படுத்துறங்க மெத்தைகள் - படிப்பதற்குப் புத்தகங்கள் என்று சகல வசதிகளும் கொண்ட சொர்க்க புரியாகியது. இது புதிய வகைப் போராட்டம் என்று வேறு பெயரிட்டுக் கொண்டார்கள். எவ்வளவு நாட்களுக்குத்தான் இப்படியே போவது என்ற எண்ணமே ஆடி 9 இனை உருவாக்கியது. ஆர்ப்பாட்டம் இங்கு கிளர்ச்சியாக்கப்பட்டது. பல கோடி பெறுமதியான சொத்துகள் அழிக்கப்பட்டன. பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. அதற்கும் அப்பால் சென்று ஜனாதிபதி மாளிகை - அலரிமாளிகை என்பனவும் ஆக்கிரமிக்கப்பட்டன. இடைக்கிடை மாபெரும் புரட்சி என்று வேறு கோசமெழுப்பப்பட்டது.

உண்மையில் இங்கு நடந்தது புரட்சியேயல்ல. புரட்சி என்பது யாவரும் பாவிக்க கூடிய சொல்லும் அல்ல.

புரட்சி என்பது அரச இயந்திரத்தையே புரட்டி எடுப்பதுதான். அது குறிப்பிட்ட சிலரால் நடத்தப்படுகின்ற வித்தையல்ல. ஒட்டு மொத்த மக்களால் முற்று முழுதாக அரச இயந்திரத்தை மாற்றுவதற்காக வீச்சுடன் செய்யப்படுகின்ற ஒரு செயற்பாடு ஆகும். நீங்கள் என்னவும் செய்யுங்கள் அது உங்கள் விருப்பம். தயவு செய்து புரட்சி எனும் பதத்தை உபயோகிக்க வேண்டாம்.

**மு. தயாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே................


**1** **புரட்சி - கிளர்ச்சி - ஆர்ப்பாட்டம்**
ஆசிரிய தலையங்கம்

**2** **உள்ளடக்கம்**

**3** **கடவுள் நகரத்தில்....**
வசந்ததீபன்

**8** **சிறுகதை பற்றிய ஒரு குறிப்பு**
நடராசா பார்த்திபன்

**10** **அடைக்கலம்**
க.தனுசியா

**12** **சிட்டுக்குருவி**
கு. குணறுபேஸ்

**15** **கரும்பலகை - தொடர்கதை**
மு.தயாளன்

**18** **கல்யாணமாம் கல்யாணம்**
என். நஜ்முல் ஹுசைன்

**20** **நிஜங்கள் பேசுகிறது**
து.மதனரூபி

**22** **ஆழ்மனக்குமுறல்**
ஆர்த்திகா சுவேந்திரன்

**25** **அமாவாசைக்குள் ஒரு நிலவு**
பசறையூர் ஏ.எஸ். பாலச்சந்திரன்

**29** **விமர்சனம்**
அலெக்ஸ் பரந்தாமன்

**31** **மஞ்சரி 22 ஒரு பார்வை**
பேராசிரியர் செ. யோகராசா

**32** **சிறுகதை எழுதுவது எப்படி...**
மு.தயாளன்


**சிறுகதை மஞ்சரி 24 இன் சிறந்த இரண்டு சிறுகதைகள்**

1. கோணற்(ப்) பார்வைகள் - ஆர்த்திகா சுவேந்திரன்
2. வேட்டை - மண்டூர் அசோகா

மஞ்சரியின் 26 ஆவது இதழ்(புரட்டாதி) நந்தினிசேவியர் சிறப்பிதழாக வெளிவருகிறது. அவர் சம்பந்தப்பட்ட விடயங்கள் வரவேற்கப்படுகின்றன.

## எழுத்தாளர்கள் கவனத்திற்கு:

*மஞ்சரியில் எழுதும் இலங்கையில் வதியும் எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக 1000 ரூபா தரப்படும் என்று கூறியுள்ளோம். தயவுசெய்து உங்கள் வங்கிக் கணக்கு விபரங்களை ஒவ்வொரு தடவை நீங்கள் கதையை அனுப்பும்போதும் கதையுடன் இணைத்துவிடுங்கள். (ஆ-ர்)*


**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர், ஓவியர் கைலாசநாதன்


**1000 பேரை இணைப்போம்......**
தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.
லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


**அட்டை வடிவமைப்பு:** ரமணன் நற்குணதயாளன்
**அட்டைப்படம் :** Mrs Ranjeet Bambara
**ஓவியர்:** G. கைலாசநாதன்

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649


**சந்தா விபரம்:**
**Srilanka:** 900Rs/Year
Bank detail : Mrs Thanabalasingam Sasikala , Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year
**Den/Swiss/Ger:** 80Euro/year. | **Can/USA/Amer**: $120
Bank details: M. Natkunathayalan, Barclays,
Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649
வவுனியா பண்டாரவன்னியன் புத்தகசாலை +94772244616




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●● வசந்ததீபன்

# கடவுள் நகரத்தில்
# பிச்சை புகு காண்டம்



துளசிதாசர் வாழ்ந்த அந்த நகரத்திற்கு வந்திருக்கிறேன் என்று மனம் ஆனந்தத்தில் துள்ளியது. ராம சரித மானஸத்தின் கவிதை வரிகள் தெருவெங்கும் வரவேற்புத் தோரணங்களாய் தொங்கிக் கொண்டிருப்பது போல் தெரிந்தது. பிஸ்மில்லாஹ் கானின் ஷெனாய் இசைச் சுரங்கள் காற்றில் மிதந்து வந்து பன்னீர்ப் பூக்களை என் மேல் சொரிவது போலிருந்தது. பாரதியின் மூச்சுக்காற்று இந்நகரக் காற்றில் கலந்திருக்கிறது போல என்னுள் பிரக்ஞை உண்டாகியது. எங்கிருந்தோ அவரின் பாடல் வரிகள் எனக்குள் வருகின்றன... " நிற்பதுவே நடப்பதுவே நீங்களெல்லாம் சொப்பனந்தானோ... பல தோற்ற மயக்கங்களோ..கற்பதுவே கருதுவதே உன்னில் ஆழ்ந்த பொருள் இல்லையோ..வெறும் காட்சிப்பிழை தானோ.. நான் இனம்புரியாத உணர்வுகளால் திளைக்கிறேன். மந்தாகினி நதியின் சப்தம் மந்திரங்கள் உச்சரிப்பது போல் கேட்டது.

இந்த மண்ணில் பாதம் பதித்து விட்டேன்... ஜென்ம சாபல்யம் அடைந்து விட்டேன்... இனி பிறவிகள் ஏதும் இல்லை... பாவக்கடலில் உழலும் துன்பமும் இல்லை... பேரின்பம் பெற்று விட்டேன்.. பேரின்பம் பெற்று விட்டேன்... என மனக் குருவி உச்சஸ்தாயில் பாடிக் கொண்டிருந்த போது.. யாரோ அதட்டுவதாக அறிந்து நிஜத்திற்கு வந்தேன். எதிரில் ஆட்டோக்காரன் ஒருவன் தனது கருமஞ்சள் ஆட்டோவின் இருக்கையில் தொங்கியபடி.. ஒரு கால் வண்டிக்குள்ளும் மறுகால் நிலத்தில் மிதித்தபடியும் கத்தி னான்..."சவமே.. விலகிப் போ.. " எனக் ஹிந்தியில் கத்தினான். நான் துடித்துப் போனேன். எவ்வளவு ஆசைகளும் கன வுகளுமாய் இந்த மண்ணில் காலடி வைத்ததும்.. என்னவி தமான நாரசமான வார்த்தைகளைக் கேட்க வேண்டியதாகி விட்டது.

தெருக்களைப் பார்த்தேன். ஒடுக்கமாகவும் அங்கும் இங்கும்.. குப்பைகள் சிதறிக் கிடக்க அருவருப்பாய் இருந்தது. சாலைகளில் ஈக்களாய் மனிதர்கள் மொய்த்துக் கொண்டிருந்தனர். அவர்களை உரசியபடி.. மாடுகளும் ம்மா..ம்மா.. என்று கத்தியபடி சென்று கொண்டிருந்தன. அதன் வயிற்றெலும்புகள் துருத்திக் கொண்டிருந்தன. வீடுகளெல்லாம் சரிந்த மரப்பெட்டிகள் போலிருந்தன. சந்து..சந்துகளாயிருந்த அந்த நகருக்குள் ஆட்டோக்களும், குதிரை வண்டிகளும் திரிந்தன. நான் கங்கை நதியின் கரையிலுள்ள படித்துறைக்குப் போனேன். நதிக்குள் கீழாக இறங்கும் படிகளில் இறங்கினேன். கனவுகளுக்குள் இறங்கிப் போவது போலிருந்தது. தண்ணீர் சலசலத்துப் போய்க் கொண்டிருந்தது. கரைக்குச் சற்றுத் தள்ளி கம்பிவேலி போடப்பட்டிருந்தது. அதற்குள்ளாக ஆண்களும் பெண்களும் குளித்துக் கொண்டிருந்தார்கள். நான் கால் வைத்த படியில் மலம் மாதிரி ஏதோ கிடந்தது. பார்க்காமல் சட்டென்று அதை மிதித்து.. அருவருப்புடன் நீரில் கழுவ கீழாகச் சென்றேன். கம்பிவேலிகளில் பழைய துணிகள் சிக்கி ஊறிய படிக் கிடந்தன. அங்கு கூட்டம் அதிகமாயிருந்தது. எல்லோரும் நீரில் முங்கி..முங்கி எழுந்து கொண்டிருந்தார்கள். முழங்கால்கள் வரை நீரில் நனைத்துக் கழுவி விட்டு மெல்ல படிகளேறினேன். சில காக்கைகள் கத்தியபடி பறந்து திரிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமான வெப்பம் எங்கும் பரவியிருந்தது. யாத்ரீகர்கள் குடும்பத்துடன்.. தனித்து.. ஈசல்களைப் போல எங்கும் திரிந்தார்கள். காசிவிஸ்வநாதர் கோவிலை தேடிச் சென்றேன். எந்தத் தெருவில் அரிச்சந்திரன்.. தன் மனைவியை ஏலம் போட்டு விற்றிருப்பான் என யோசித்து..கண்களால் துளாவியபடி கோவிலுக்கு முன்பாக வந்து சேர்ந்தேன்.

நீண்ட வரிசைகளில் விதவிதமான அங்கவீனர்களான பிச்சைக்காரர்கள் உட்கார்ந்தபடி பல்வேறு மொழிகளில் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தார்கள். நதிக்கரை மாதிரி அமர்ந்திருந்த அவர்களின் ஊடாகக் கோவிலை நோக்கி நடந்தேன். எனக்கு முன்னால் வடநாட்டு யாத்ரீகர்கள் சென்றார்கள். அவர்களில் ஒருவர் வலதுபுறமாய் அமர்ந்திருந்த ஒரு பிச்சைக்காரனுக்கு ஒரு ரூபாயைப் போட்டுவிட்டு நகர்ந்தார். அதைப் பெற்றுக்கொண்ட பிச்சைக்காரன் தமிழில் வசவுச் சொல்லை ஆத்திரமாக அந்தத் தர்மம் செய்த நபர் மீது வீசினான். அவரோ அதைக் கண்டுகொள்ளாமல் விரைந்தார். அவருக்குப் பின்னால் சென்று கொண்டிருந்த நான் பட்டென்று திரும்பி வைதவனைப் பார்த்துக் கேட்டேன்... " நீ என்ன தமிழா..." ? என் திடுக்கென்ற கேள்வியைக் கேட்டதும் அவன் துள்ளி எழுந்தான். அவனுக்கு வயது முப்பது இருக்கும். மெல்லிய புன்னகை தவழ என்னைப் பார்த்து.. " ஆமாங்க.. நீங்க எங்கிருந்து வர்றேங்க...? " என்றான். நான் என்னைப் பற்றிக் கூறி விட்டுக் காசிக்கு சாமி தரிசனம் செய்ய வந்ததைப் பற்றிக் கூறினேன். அவன் என்னைத் தன்னோடு வருமாறு கூறி விட்டு முன்னால் நடந்தான். என்னால் மறுக்க முடியாமல் அவன் பின்னால் வளர்ப்பு ஆடு போல் போனேன். நெருக்கமான சிறு சிறு சந்துகளையெல்லாம் தாண்டி ஒரு டீக்கடையின் முன்பாக நிற்கச் சொல்லி.. சற்று நேரத்தில் திரும்புவதாகக் கூறிச் சென்றான்.

அவ்விடத்தை விழிகளைச்சுழலவிட்டுப் பார்த்தேன். தமிழர்கள் அதிகம் வாழும் பகுதி போல் இருந்தது. கடைகளில் ஹிந்தி மற்றும் தமிழில் விளம்பர பலகைகள் தொங்கின. என்னைக் கடந்து செல்பவர்கள் தமிழில் உரையாடியபடி சென்றார்கள். எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. சென்ற சிறிது நேரத்தில் திரும்பிய அவன் முற்றிலும் வேறுபட்டு இருந்தான். கிழிந்த சட்டையும், அழுக்குக் கப்பிய அரைக்கால் சட்டையும், திரித்திரியாய் சடைத்து இருந்த தலையும் கொண்டு விகாரமாய் காட்சியளித்த அவன் நெளிவு நெளிவாய் வாரப்பட்ட தலையுடன் ஸபாரி உடையில்.. முகத்தில் கறுப்புக் கண்ணாடி.. வலக்கையில் தங்க நிற வாட்சு என அணிந்து தமிழ் சினிமாக் கலைஞன் போல் இருந்தான். என்னருகில் வந்ததும்.. வாருங்கள் போவோம்..என்றான். அப்போது தான் எனக்கு உறைத்தது. ஆமாம்... யார் இவன்..? நம்மை எங்கே அழைக்கிறான்.. ? என்ற எண்ணம் எழுந்தாலும்... அவனைத் தொடர்ந்தேன்.

மனதில் பயமும், திகிலும் குடியேறியது. தன் வசமாக்கி எங்கேயாவது கடத்திச் செல்கிறானோ..? மனித உறுப்புக்களைக் கொள்ளையிடும் கும்பலிடம் விற்று விடுவானோ ? நரபலியிடும் சாமியார்களிடம் ஒப்படைத்து விடுவானோ ? கொத்தடிமையாய் எவரின் வசத்திலாவது விட்டு விடுவானோ ? எனக் குழம்பியபடியே சென்றேன். என்னைப் பார்த்துக் கேட்டான்... " என்ன அரண்டு போன மாதிரி வர்றீங்க..?" நான் பதிலளிக்காமல் வலிய புன்னகைத்தபடி அவன் பின்னால் தொடர்ந்தேன். அவன் மெல்லச் சிரித்தபடி... "ஒன்னும் பயப்படாதீங்க..." என்றான் என் மனதைப் படித்தது போல. இருவரும் கங்கைக் கரைக்கு வந்து சேர்ந்தோம். தூரத்தில் இரண்டு படகுகள் சென்று கொண்டிருந்தன.

புதிதாக மணமான தம்பதியினர் இருவர் கரையில் சூடம் பொருத்திக் கொண்டிருந்தனர். அருகில் அவர்களது உறவினர்கள் போல் நின்றிருந்தவர்கள், இவர்களின் செய்கைகளைக் கண்டு ரசித்து சிரித்துக் கொண்டிருந்தனர். மணமகள் முகத்தைச் சரிகைத்துணியால் மூடியிருந்தாள். மணமகனோ.. பட்டு வேட்டியானது கரை ஒட்டிய நீரில் விழுந்து விடாமல் முழங்காலை விட்டு சற்று மேலேற்றி ..குத்த வைத்து உட்கார்ந்தபடி மணமகள் பொருத்தும் சூடம் எரியத் துணை செய்ய.. இருகைகளையும் சூடத்தைச் சுற்றி மறைத்துக் கொண்டிருந்தான்.

புரோகிதர் ஒருவர் பித்ரு சடங்கு செய்வதற்காக யாரேனும் வருவார்களா என்று உட்கார்ந்தபடி எதிர் நோக்கியிருந்தார். நீண்ட சடைகளை வளர்த்துத் துறவிகளைப் போலிருந்த ஒரு ஆணும், பெண்ணும் அருகருகே உட்கார்ந்திருந்தனர். அவர்களில் அந்தப் பெண் சிறு செம்பிலிருந்து பாலை நீரில் துளித்துளியாக ஊற்றிக் கொண்டிருந்தாள். கரையோரமாகவே நாங்கள் நடந்தோம். கூட வந்த நபரை நெருங்கிய நண்பனைப் போல நினைக்கத் தொடங்கினேன். அவனும் அப்படித்தான் உணர்ந்திருப்பான் போல.. சகஜமாக பேசியபடி வந்தான். ஓரிடத்தில் ஈமக்கிரியை செய்து கொண்டிருந்தார்கள். அரிச்சந்திரன் காத்த மயானம் எங்கிருக்கிருக்கிறதோ..? என நினைத்துப் பார்த்தேன். எரியத் தொடங்குவதற்கு முன்னதாக அந்தச் சிதையிலிருந்து புகை எழும்பி அவ்விடத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு கும்பலாக ஆட்கள் நின்று கொண்டிருந்தனர். இந்திரலோகத்திலிருந்து பகீரதன் என்ற அரசனின் முன்னோர்கள் ஜென்ம சாபல்யம் அடைவதற்காக கங்கைநதி பூமிக்கு கொண்டு வரப்பட்டது என்று எப்போதோ படித்த புராணக்கதை என் நினைவில் எழுந்தது.

அந்த நதி பட்டதும் பாவ நிலமாயிருந்த இந்த உலகம்.. புனிதமாக்கப்பட்டது என்றும்.. காசிக்குச் சென்று கங்கையில் குளித்தால் சகல பாவங்களும் கழுவப்பட்டு.. புனிதர்களாய் யாவரும் மாற்றப்பட்டு மோட்சம் பெறுவார்கள் என்பது இந்துக்களின் தீராத நம்பிக்கை. அது உண்மையென்று அறிந்தவர்கள் எவருமில்லை. ஆனால் நீண்ட காலத்திலிருந்து மக்கள் காசிக்குப் பயணப்பட்டபடி இன்னும் இருக்கிறார்கள் என்பது ஆச்சரியமும் பிரமிப்பும் நிரம்பிய பூடகமான விஷயம்.

என் அருகே வந்த நண்பன் அமைதியாக ஏதோ யோசனையில் வரும் என்னைப் பார்த்ததும் அறிந்து கொண்டான். என் கவனம் முழுவதும் கங்கை நதி மீதும் அதன் கரையில் நடக்கும் ஈமக்கிரியைப் பற்றியும் இருப்பதை. உடனே என்னிடம் சொன்னான்.. " இந்தா.. பாருங்க நண்பா..இவனுக பொணத்த முழுசா எரிய விடமாட்டானுக.. சில பேர் தான் சாம்பல தண்ணியில் கரச்சு விடுவானுக.. அதிகமான பேர் அரை குறையாக வெந்த சடலத்த அப்படியே தண்ணிக்குள்ள தூக்கிப் போட்டுட்டு போய்விடுவானுக.. அத இங்க கஞ்சாக் குடிச்சிட்டுத் திரியற இந்த சாமியார் பயலுக.. பிச்சு பிச்சு தின்பாங்க..சிலபேர் தண்ணிமேல மிதக்குற அது மேல் ஏறி தவம்செய்யுறேன்னு..பொணம் அழுகி சிதஞ்சு போறவரைக்கும் உட்கார்ந்திருப்பானுக..." நான் அதிர்ந்து நடுங்கினேன்.

ஒரு பெண் வாழையிலையில் மாவு விளக்கு ஏற்றி கங்கையை நோக்கி நீட்டி வட்டமாகத் தன்னைச் சுற்றி ஆராதித்துக் கொண்டிருந்தாள். எனக்குள் ஒரு சந்தேகம் எழுந்தது. நண்பனிடம் கேட்டேன்.." ஆமா... நண்பா..இந்த நதிக் கரையில் இருக்கிற கிராமங்கள் நகரங்களிலிருந்து இறந்தவர்களை அடக்கம் செய்யாமல்.. நதியில் எறிந்து விடுவார்களெனக் கேள்விப்பட்டிருக்கேன்...அது உண்மையா...? அவன்.." மனிதர்களை மட்டுமல்ல மிருகங்களையும் எறிவார்கள்.." என்றான். நாங்கள்கடைவீதியான பகுதியில் நடந்து கொண்டிருந்தோம். சாலையின் இருபுறங்களிலும் தரையின் மேல் காய்கறிகள் பழங்கள் வீட்டு உபயோகப் பொருட்கள் என பரப்பி விற்றுக் கொண்டிருந்தார்கள். சிலர் தள்ளு வண்டிகளில் பானிப்பூரி, சென்னா மசாலா போன்ற பல்வேறு தின்பண்டங்களை வைத்து தங்களைச் சுற்றி நிற்பவர்களுக்கு சிறு சிறு தட்டுகளில் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

யாத்ரீகர்கள் கூட்டம் கூட்டமாக பல வயது வித்தியாசங்களில்... தெருக்களில் முண்டியடித்துப் போய்க் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே பாதையோரங்களில் வயதான ஆண்களும் பெண்களுமாய் காணப்பட்டார்கள். அவர்களின் கையில் கிழிந்த துணிப்பைகள், வட்டி, போணி போன்றவைகள் இருந்தன. நண்பனிடம் ஆச்சரியமாய் ஏன்...? இந்த ஊரில் வயதானவர்கள் அதிகமாக தெருவோரங்களில் திரிகிறார்கள் எனக் கேட்டேன். அதற்கு நண்பன் சொன்னான்.. "மோட்சத்திற்குச் செல்லக் காசி நகருக்கு வந்து விட்டாலே போதும் என்ற குருட்டு நம்பிக்கையில.. பலபேரு வயதானவர்களை இங்க கூட்டிட்டு வந்து அனாதரவாய் விட்டுட்டுப் போய்றாங்க. பலபேரு அவர்களாகவே குடும்பத்தாரால கைவிடப்பட்டு இங்க வந்து சேர்றாங்க. இன்னும் பலபேரு நோயாளிகளையும், ஊனமுற்றவங்களையும் கொண்டு வந்து விட்டுட்டு ஓடிர்றாங்க. சிலபேரு தான் தாம் கொண்டுவந்து விடுறவங்கள பராமரிக்க ஆட்கள நியமிச்சு வேண்டிய உதவிகள் செய்யுறது. ஆனா அவங்க கூட பணம் கொண்டு வந்து கொடுப்பதோடு சரி..தங்களின் அன்பையோ..ஆறுதலையோ..பராமரிப்பில் உள்ளவங்க கிட்ட காட்டாம.. வந்த கணத்திலே திரும்பிப் போய் விடுவார்கள்.

இப்படி ஆதரவற்றுத் திரியும் வயதானவர்களை ஊனமுற்றவர்களை பல சமூக விரோதக் கும்பல்கள் கையகப்படுத்தி... அவர்களை பிச்சை எடுக்க வைப்பது.. கஞ்சா போன்ற போதைப் பொருட்களை விற்கப் பயன் படுத்துவது.. பாலியல் தொழில் செய்ய கட்டாயப்படுத்தி ஈடுபடுத்துவது..மேலும் மனித உறுப்புக் கொள்ளையர்களிடம் விற்பது.. போன்ற பஞ்சமாப் பாதகங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். அக் குழுக்களுக்குள் அடிக்கடி மோதல்கள் ஏற்படும். அப்போது அவற்றில் சிக்கிச் சிதைவது பாவப்பட்டவர்களான அந்த வயதானவர்களும், ஊனமுற்றவர்களும், நோயாளிகளும் தான்.எனக்கு பகீரென்றது. மனது கனத்து வலித்தது. என்னால் கோவிலுக்குள் செல்ல மனசில்லை. வயிறு பசித்தது. நண்பனிடம் சாப்பிட்டு விட்டு பிறகு கோவிலுக்குப் போகலாம் என்று சொன்னேன். அவனும் சரியென்றான். போகிற வழியில் நண்பனைப் பற்றி ஏனோ... கேட்கத் தோணியது. சற்றுத் தயக்கத்துடன் கேட்டேன். அவனும் கொஞ்சம் கூட குழறாமல் சொல்ல ஆரம்பித்தான்.... " என் பெயர் சன்னாசி. நான் மதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம் மேலூரில் IT முடித்து விட்டு நண்பர் ஒருவரின் வழிகாட்டலில் ஜபல்பூருக்கு வந்து ஒரு எவர்சில்வர் பாத்திரங்கள் தயாரிக்கும் கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். திடீரென்று அந்தக் கம்பெனியை எந்த வித காரணமின்றி மூடிவிட்டார்கள். எனவே நான் வேலை யிழந்ததும் நிலை குலைந்து போனேன். கடைசியில் ஒருவழியாக மனதைத் தேற்றிக் கொண்டு சொந்த ஊருக்குத் திரும்பவதற்காக கொல்கத்தாவிற்கு வந்து ரயில் நிலையத்தில் அமர்ந்திருந்த பொழுது தான் அங்கு ஒருவனைச் சந்தித்தேன். அவன் திருநெல்வேலிக்காரன். இட்லி வியாபாரம் செய்து வந்தான். பசியினால் மயங்கி விழுந்த என்னைப் பார்த்து.. தமிழ்காரன் என.. என் உடை தோற்றங்களை வைத்து அறிந்து.. முகத்தில் தண்ணீர் அடித்து.. எனக்கு சாப்பிட இட்லி கொடுத்தான். நானும் என்னைப் பற்றிய விபரங்கள் எல்லாவற்றையும் அவனிடம் சொன்னேன்.

திருநெல்வேலிக்காரனும் என்னை ஆறுதல்படுத்தி இட்லி வியாபாரத்தில் தனக்கு உதவியாளாக வைத்திருந்தான். சில காலம் சிரமமில்லாமல் கழிந்த போது வங்காளி ஒருவன் எனக்கு நண்பனான். அவன் என்னிடம்.. தான் பணம் தருவதாகவும்.. இட்லி வியாபாரத்தைச் சுயமாக செய்யு மாறும்.. வரும் லாபத்தில் இருவரும் பங்கு பிரித்துக் கொள்ளலாம் என்றும் சொன்னான். அவன் பலமுறை வற்புறுத்தியும் நான் என்னை ஆதரித்தவனை விட்டு விலக விருப்பமில்லாமல் இருந்தேன். ஆனாலும் ஒரு கட்டத்தில் வங்காளி நண்பனின் பேச்சைக் கேட்டு அவனிடம் ரூ.5000 வாங்கி அவனின் கார்ஷெட்டில் தங்கி இட்லித் தொழிலை சுயமாகத் தொடங்கினேன்.

அங்கு ரயில் நிலையம், பஸ் நிலையம் மற்றும் பல இடங்களில் இட்லி வியாபாரம் செய்வது எல்லாம் திருநெல்வேலிக்காரர்கள் தான். முழுவதுமாக கொல்கத்தாவை ஆக்கிரமித்திருந்தார்கள். அவர்கள் என்னைத் தனித்து வியாபாரம் செய்ய விடாமலும் யாரையும் என்னிடமிருந்து இட்லி வாங்க விடாமலும் இடஞ்சல் செய்ததில் என்னுடைய தொழில் முடங்கி கை முதலை இழந்து போனேன்.

இந்நிலையில் இனி நீ கொல்கத்தாவில் இருந்து பிரயோசனமில்லை என்று சொல்லி..அந்த வாங்காளி நண்பன் தன் பணத்தைப் பற்றிக் கவலைப்படாதேயென பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்து.. என் கையில் வழிச் செலவுக்குப் பணத்தைக் கொடுத்து.. நீ..உன் ஊருக்குப் போ...எனச் சொன்னான்.நானும் நொந்தபடி ரயில் நிலையத்திற்கு வந்து அமர்ந்தேன். பயணிகள் கூட்டத்தினால் நிலையம் திணறிக் கொண்டிருந்தது.

அப்போது ஒரு சாமியார் என்னருகில் வந்தார். வந்தவர் என்னுடைய பரிதாப நிலையைப் பார்த்து விசாரித்தார். நானும் நடந்தவைகளை விவரித்தேன். என் மீது இரக்கப்பட்ட அவரும் என்னிடம்... " என்னுடன் வர்றயா.. ? " எனக் கேட்டார். நானும் ஏதும் பதிலளிக்காமல் உட்கார்ந்திருந்தேன். அவர் மேலும் சொன்னார் "காசிக்குப் போனால் ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கலாம்..." நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்று வார்த்தையைக் கேட்டதும் உடலோடு நிழல் செல்வது போல சாமியாருடன் காசிக்கு வந்து ஒரு பிச்சைக்காரனாகிப் போனேன். சாமியாரும் சிறிது காலம் என்னோடு இருந்து விட்டு எங்கோ போய் விட்டார்..." என முடித்தான்.

நண்பன் சொன்னவைகள் என்னை உலுக்கிப் போட்டது. மேலூருக்கு பக்கத்தில் சின்னக்கா பட்டியில் பிறந்த சன்னாசி காசியில் தொழில்முறைப் பிச்சைக்காரன். தினசரி குறைந்தபட்சம் ரூ. 2000 வரைக்கும் அவனது வருமானம். அவனது சொந்த ஊரில் தோட்டம் வயல் என்று வாங்கிப் போட்டிருக்கிறான். மேலும் அவன் புதுசா வீடு ஒன்றும் கட்டியிருக்கிறான்.

"இன்னும் 2 வருசந்தான் இங்க இருப்பேன். பிறகு சொந்த ஊருக்குப் போயிருவேன்... அப்புறந்தான் கல்யாணம் செய்யணும்..." என மேலும் சொல்லிக் கொண்டே வந்தான். பாம்பாட்டி ஒருவன் தெருவில் வித்தை காட்டிக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றி ஆட்கள் வட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். அவனருகில் இரண்டு பாம்புக்கூடைகள் இருந்தன. ஒன்று மூடப்பட்டிருந்தது. மற்றொன்றில் சாம்பல் நிறத்தில் ஒரு நாகப்பாம்பு படம் எடுத்தபடி ஆடிக் கொண்டிருந்தது. அவன் குத்த வைத்தபடி இருகைகளில் மகுடியைப் பிடித்து உதடுகளில் பொருத்தி பாம்பிற்கு முன்னால் மேலும் கீழும் இடமும் வலமும் ஆட்டியபடி ஊதி இசை எழுப்பிக் கொண்டிருந்தான். சற்றுத் தள்ளி சிறிது தூரத்தில் தரையில் ஊன்றப்பட்ட இரும்புக் கம்பியில் கட்டப்பட்ட சங்கிலியை இழுத்துக் கொண்டு கீரிப்பிள்ளை ஒன்று மிரண்டு மிரண்டு அங்கும் இங்கும் ஓடியது.

முகம்மது அசைவ உணவகம் என்று ஹிந்தியில் பெயர்ப்பலகை தொங்கிய கடைக்குள் சன்னாசி நுழைந்தான். பின் தொடர்ந்த எனக்குள் பயமும் தயக்கமும் ஊறியது. புனிதமான காசிநகருக்கு புண்ணியம் தரும் விஸ்வநாதரையும், விசாலாட்சியையும் வழிபட வந்த நான் அசைவ உணவை உண்ணப் போகிறோமே என்பதால் அல்ல... வகை வகையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்டர் பண்ணித் தின்று விட்டு... என் தலையில் பில்லைக் கட்டிவிட்டு ஓடிப் போய் விடுவானோ...சன்னாசி என.. நிரந்தர வேலையற்ற என் நிலைமை சந்தேகம் கொள்ள வைத்தது. சன்னாசி என்னிடம் எதுவும் கேட்காமல் இரண்டு சிக்கன் பிரியாணி, ஈரல் கறி, ஆம்லெட் என் ஆர்டர் கொடுத் தான். நான் பதறிப் போனேன்.

மேஜையின் மீது கொண்டு வந்து வைத்தவைகளைப் பார்க்க..பார்க்க.. தடுமாறி நாற்காலியிலிருந்து விழுந்து விடுவேனோ... என்பது போலிருந்தது. சன்னாசி சாவகாசமாய் சாப்பிட ஆரம்பித்தான். நான் அமைதியாய் உட்கார்ந்தி ருப்பதைப் பார்த்ததும்... " சாப்பிடுங்க.." என்றான். நான் மெதுவாக விள்ளல் விள்ளலாக எடுத்துச் சாப்பிட ஆரம் பித்தேன். விரைவாக சாப்பிட்டு முடித்து விட்டு கையை கழுவி விட்டு வந்து அமர்ந்த சன்னாசி இரு சிக்கன் பிரியாணி பார்சலுக்கு ஆர்டர் கொடுத்தான். நான் கடைசியிலிருந்த சிறிதளவு பிரியாணியை அப்படியே வைத்து விட்டு கை கழுவப் போனேன். சன்னாசி சிரித்துக் கொண்டே மேஜையிலிருந்த தட்டில் கொஞ்சம் ஓமத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். இப்படியே நழுவி விடலாம் என்று நினைத்தேன். ஆனாலும் வாசலில் வைத்து பிடித்து விடுவார்களோ என்ற பயமும் திகிலும் எழுந்தது. பார்சலை வாங்கிக் கொண்டு சன்னாசி கை கழுவிக் கொண்டிருந்த என்னைக் கூப்பிட்டான். நான் பர்ஸைத் தொட்டுக் கொண்டு அவனிடம் போனேன்.

அவன் என்னிடம் பார்சலைக் கொடுத்தான். நான் பணம் என்று இழுத்தேன். அதற்கு அவன் அதெல்லாம் கொடுத்தாச்சு... போகலாம்... என்றான். எனக்கு உயிர் வந்தது போலிருந்தது. அதோடு என்னை நினைத்தே எனக்கு வெட்கம் வந்தது. உணவகத்தை விட்டுக் கீழிறங்கி சாலைக்கு வந்தோம். என் மனசு இனம் புரியாத ஆனந்தத்தில் நிரம்பி இருந்தது. சன்னாசியிடம் சொன்னேன்.. அவனைத் தேற்றுவது போல... " பாவம்.. பிச்சைக்காரர்கள்..எவ்வளவு சிரமப்படுறாங்க..கைகள் அழுகிய நிலையிலும்..புண் வலியுடன் வெயிலில் வதங்கியபடி... " என் பேச்சைக் கேட்டதும் சன்னாசி ஆரவாரமாக சிரித்தபடி சொன்னான்... "நண்பா..அவர்கள் கையும் காலும் அழுகிப் போகல..ஆட்டுக்கறியக் கட்டி அதன் மேல் வெண்ணெய் தடவி இருக்காங்க..வெயில் அதன் மேல் பட்டதும் அது உருகி அழுகியிருப்பது போலத் தெரியும். அதைப் பார்க்குறவங்க இரக்கப்பட்டு காசுகளைப் போட்டுட்டுப் போவாங்க.. இவங்க ராத்திரியில வீட்டுல போய் தம் உடம்போடு கட்டியிருந்த கறியை வறுத்துத் தின்னுட்டு சரக்கோ..கஞ்சாவோ அடிப்பாங்க. இங்க என்னைப்பாத்த இடத்துலே புண்ணு வந்தவங்களையும் பெரு வியாதி வந்தவங்களையும் உட்கார விட மாட்டாங்க. துரத்தி விட்டுறுவாங்க. அங்க இருந்தவங்க எல்லோரும் என்னைப் போலத் தான்..." மறுபடியும் நாங்கள் கோவிலுக்கு முன்னால் வந்தோம். எனக்குக் கோவிலுக்குள் சென்று சாமி தரிசனம் செய்ய விருப்பமில்லை. சன்னாசி என்னை எவ்வளவு வற்புறுத்தியும் நான் போக விரும்பவில்லை. கையிலிருந்த பார்சலை அவனிடம் நீட்டினேன்.

அவன் சொன்னான்.. "நண்பா.. உனக்காகத் தான் இதை வாங்கினேன்..போகிற வழியில் பசிக்கு சாப்பிட் டுக்கோ... தேவப்படுறவங்களுக்கு குடுத்துக்க..."

நான் துடித்துப் போனேன். மேலும் அவன்.. " பொழச்சிருந்தா மறுபடியும் பாப்போம்..." என்றபடி போய் விட்டான். மண்கலயத்தில் போட்டு மண்ணாலான மூடியிட்டு..மூங்கில் நார் தூக்கில் வைக்கப்பட்டிருந்த சிக்கன் பிரியாணிப் பார்சல்களை இரண்டு கைகளிலும் தொங்கவிட்டபடி கடவுள் நகரத்தின் ரயில் நிலையத்தை நோக்கி நான் நடந்தேன்.

## வாசிப்பில்...

**- அர்த்நாரீஸ்வரர் என்ற இந்திநாவலில் ரசித்தது-**

"மதத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் நீதி நேர்மை என்கிற கட்டுப்பாடுகளைப்போட்டுக் கடக்க முடியாமல் நம்மை பிணைத்துவிட்டார்கள். இதனால் பல அபிமன்யுகள் சாகத்தான் வேண்டிவரும்." என்று குறுக்கிட்டுப்பேசினாள். " பண்பாடு நமக்குப் பயத்தைத்தான் உண்டுபண்ணுகிறது. இந்தப் பயம் என்று சொல்லக்கூடிய அவர்களின் உள்ளே வளரும்போது மனிதாபிமானம் இல்லாத நம்பிக்கைதான் வளர்கிறது. இந்த நம்பிக்கை என்னும் ஆயுதத்தினால் அவர்கள் எம்மை அடிக்கிறார்கள். நான் இந்தச் சூழ்நிலையில் அபிமன்யூவாக மாறமாட்டேன். நேர்மை மனத்தோடு சம்பந்தப்பட்டது. உடலோடு அல்ல. " என்று ஏதோ சொன்னேன். என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். சோபாவில் உட்கார்ந்து கொண்டு என்னை சமாதானப்படுத்தும் முறையில்" ரொம்பவும் யோசிக்கிறாய் போல் தோன்றுகிறது. பயம் என்பது உன் மனத்திற்குள் இருக்கிறது. அதனால்தான் நீ அமைதியற்ற நிலையில் இருக்கிறாய்" என்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசா பார்த்திபன்

# சிறுகதை பற்றிய ஒரு குறிப்பு

சிறுகதை என்பது சிறிய கதையல்ல. உருவச் சிறிய தன்மை சிறுகதைக்கு அவசியம். அதேவேளை அண்டன் செக்கோவ் எழுதிய கண்ணாடி என்ற சிறுகதை ஆயிரத்தறு நூறு (1600) வார்த்தைகளைக் கொண்டிருந்தது. புதுமைப்பித்தனின் மகாமசானம் ஆயிரம் (1000) வார்த்தை களைக் கொண்டிருந்தது. இவற்றையும் நாம் மறந்து விடக் கூடாது. ஆக, ஒரு நல்ல சிறுகதை வார்த்தைகளின் கனதியினாலும் வசனங்களின் அமைப்பாலும் சொன்ன விடயத்தினாலும் படைத்த அன்று கிடைத்த அதே புதுமை யுடன் இன்றைக்கும் இருக்கிறது, சிந்திக்க வைக்கிறது. வாசகர் பார்வையை மாற்றுகிறது.

ஒரு நல்ல சிறுகதை வாசிக்க வாசிக்கப் புதிய பொருள் கொடுக்க வேண்டும். மனதிலே வாழ்க்கை பற்றிய விசாரணையை எழுப்பியபடி இருக்க வேண்டும். ஆவி படிந்த கண்ணாடியைத் துடைத்து விட்டது போல் ஒரு சிறுகதையைப் படித்து முடித்ததும் மனது துலக்கமாக வேண்டும் என்பர். உலகிலேயே மிகவும் சிறிய சிறுகதை இவ்வாறு அமைந்துள்ளது.

"விற்பனைக்கு. குழந்தையின் சப்பாத்துக்கள். பாவிக்காதவை"
இந்தச் சிறுகதை உங்களுக்குள் என்ன விசாரணையை ஏற்படுத்துகிறது.? இது ஆளாளுக்கு வேறுபடும். ஆனால் உங்கள் சிந்தனையைத் தூண்டுகிறதல்லவா? கேள்விகளை எழுப்புகிறதல்லவா? ஏன் விற்கப்படுகிறது? குழந்தைக்கு ஏதும் நடந்து விட்டதா? அளவில்லையா? வறுமையா?... இவ்வாறு பல கேள்விகள் எழுகின்றன அல்லவா? அதுதான் இன்றைய சிறுகதையின் இலட்சணம் எனப்படுகிறது.

இன்னொரு சிறுகதையைப் பாருங்கள்.
மாலையும் இரவும் மயங்கும் நேரம். அரும்பொருட் காட்சியகத்தில் நிற்கும் கனவான். தன் முன் நிற்பவரிடம் "நான் பேய்களை நம்புவதில்லை" என்றார். "அப்படியா?" என்று கேட்டுவிட்டு அந்த உருவம் மறைந்து விட்டது.
இச்சிறுகதையில் காலம், களம், பாத்திரம், சம்பாஷனை யாவும் இருக்கின்றன. கதை முடிந்து விட்டது. வாசகன் சிந்திக்கத் தொடங்குகிறான். மாலையும் இரவும் மயங்கும் வேளை.. ஒரு மைமல் பொழுது, இருட்டுமில்லை வெளிச்சமுமில்லா நிலை. சற்று அச்சமூட்டும் நேரம். நிற்பதோ அரும்பொருள் காட்சிச்சாலை... அங்கு இருக்கும் பொருட்கள் எங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன..அவையும் சஞ்சலத்தை ஏற்படுத்தும். கனவான் என்றதும் அவர் பற்றிய நினைப்பு... பயந்தாலும் தனக்கு பயமில்லாதது போல பாசாங்கு காட்டும் இயல்பு கொண்டவர். உண்மையில் அந்த நேரமும் இடமும் பொருட்களும் தந்த அச்சத்தின் காரணமாகவே அவர் தன்னேயே தேற்றுவது போல தன் முன் நிற்பவரிடம் கதைத்து ஒரு பேச்சுத் துணையைத் தேட முயற்சிக்க...அப்படியா.. எனக்கேட்டு அதுவும் மறைய.. இப்போது வாசகன் அந்தக் கனவான் நிலைமையைப் பற்றி சிந்திக்கத் தொடங்குகிறான். சிந்திக்க வைத்து வாசகன் பார்வையை மாற்றுகிற தல்லவா ?

அடுத்து அண்மைக்கால சூழ்நிலைக்கேற்ப முன்னையவற்றை விட சற்று பெரிய சிறுகதை. இது "சோப்பும் வாசனையும்" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. என்னுடைய கணவர் எனக்கு ஒன்றும் விட்டுப் போகவில்லை. நான் வசிக்கும் குடிசை இடி முழக்கத்துக்கு ஆடும். அடக்கம் செய்யும் முன்னர் பிணங்களை கழுவுவது தான் என் தொழில். அந்த வருமானத்தில் நான் உயிர் வாழ்ந்தேன். ஒரு நாள் பின் மதியம். தாடி வைத்த ஒரு மனிதன் வந்து கதவைத் தட்டினான். பிணம் கழுவுவதற்கு என்னை வரச் சொன்னான். காரிலே ஒரு பெண் இருந்ததால் மறுப்புச் சொல்லாமல் நான் அவனுடன் புறப்பட்டேன். அவள் இளம் பெண் என ஊகித்தேன். தலையிலிருந்து பாதம் வரை மூடும் கறுப்பு அங்கியை அணிந்திருந்தாள். என்னுடைய வணக்கத்துக்கு அவள் பதில் வணக்கம் சொல்லவில்லை. ஓயாத விரல் அசைவில் அவள் பிரார்த்தனை. முணுமுணுக்கிறாள் என்று தெரிகிறது. அவள் பாதங்கள் மலிவான பிளாஸ்டிக் செருப்பில் வெள்ளையாகக் காணப்பட்டன.

அந்தக் கறுப்பு உடைக்குள் ஓர் ஆண் இருக்கலாமோ என்று கூட எனக்குச் சந்தேகம் எழுந்தது. கார் அமைதியாகப் போய்க்கொண்டிருந்தது. இன்னும் தூரமா? என்று மூன்றாவது தடவையாகக் கேட்டேன். "அல்லாவில் விசுவாசம் வை பெண்ணே" என்றான் அந்த மனிதன். ஒரு பாலைவனத்தின் ஊடாகப் போகும் சாலையில் கார் திரும்பியது. பாதை பழகியவன் போல தயக்கமில்லாமல் அவன் காரை ஓட்டினான். நான் அந்தப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணிடம் இறந்து போன மனுஷி அவரின் தாயாரா? என்று வினாவினேன்.அதற்கும் பதில் கிடைக்கவில்லை.

இரண்டு மலைகளுக்கு நடுவில் தெரியும் மண் கும்பியை நோக்கி காரைச் செலுத்தியவன் அது சமீபித்ததும் நிறுத்தினான். அவன் கதவைத் திறந்ததும் கீழ்ப்படிதலுடன் இறங்கிய பெண் அவனுக்கு முன்னே நடந்தாள்.கார்க் கதவை ஒருத்தரும் சாத்தவில்லை. மண் கும்பியில் ஏறி அடுத்த பக்கம் இறங்கி மறைந்தாள். அவனும் அவள் பின்னால் இறங்கினான்.ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் பாலைவனத்தின் நிசப்தத்தைக் கலைத்தது. ஒருவேளை மூன்று சத்தமாகவும் இருக்கலாம். மலைகளின் எதிரொலி என்று நினைக்கிறேன்.அந்தச் சம்பவம் நடந்து பல வருடங்களாகியும் என் கனவுகளில் கேட்டு நான் திடுக்கிட்டு கண் விழித்து விடுகிறேன். சில நிமிடங்கள் கழித்து அவன் எதையோ இழுத்து வருவது போல வந்தவன் என்னைப் பார்த்து "வெளியே வா" என்றான்.பீப்பாய் தண்ணீரை வாகனத்திலிருந்து இறக்கினான்.சோப்பு.வாசனை எண்ணெய் ஆகியவற்றை எடுத்து வரச்சொல்லி எனக்கு நினைவூட்டினான்.

நான் அந்தப் பெண்ணின் மார்பில் பூப்போல மலர்ந்த இரத்தத்தை துடைத்துத் தண்ணீரில் கழுவி உடலை அடக்கம் செய்வதற்குத் தயார் செய்தேன்.அவன் மணலில் குழி தோண்டினான். அவன் கண்களில் நிறுத்தாமல் வழிந்த நீர் தாடியை நனைத்தது.பிணத்தைப் புதைக்கும் போது கட்டுமீறிக் கதறினான். எனக்குப் பயம் பிடித்தது. இருட்டிப்போன சமயம் என்னை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தான்.

இந்தச் "சோப்பும் வாசனையும்" என்ற கதை முடிந்து போனது. ஆனாலும் அந்தக் கதை வாசகர் மனதை விட்டுப் போகுமா? வாசகருடைய மனது அதை மீட்டிக் கொண்டே இருக்கும்.கதை முடிந்த பின்னர் தான் அது ஆரம்பமாகிறதல்லவா..?பல கேள்விகளையும் எழுப்பிய வண்ணம் இருக்கிறதல்லவா? அந்த மனிதன் யார்? தந்தையா? கணவனா? அல்லது காதலனா?சகோதரனா? இல்லைச் சமூக அக்கறை கொண்டவனா? அவள் செய்த தவறு தான் என்ன? எதற்காக கொலை செய்தான்.?அவள் ஏன் முழுச் சம்மதத்துடன் புறப்பட்டு வந்தாள்? அவன் ஒன்றுமே பேசாமல் கார்க் கதவைத் திறக்க அவள் ஏன் முன்னால் இறங்கி நடந்து போனாள்? தான் இறக்கப் போகும் இடத்தை அவளே தெரிவு செய்தாள்.எதற்காக இப்படியெல்லாம் நடந்து கொண்டாள். புதைக்கும் போது எதற்காக கட்டுமீறிக் கத்தி அழுதான்? குழி வெட்டும் போது ஏன் அழுது கொண்டிருந்தான் ? அவள் இறக்கத்தான் வேண்டுமா? அவளைக் கொலை செய்வதுதான் தண்டனையா? அவளைத் தண்டிக்க யார் அவனுக்கு அதிகாரம் கொடுத்தார்கள்.? வாசகர் தான் உரிய விடைகளை கண்டுபிடிக்க வேண்டும்.சிறந்த சிறுகதைக்கான அடையாளம் இது என்கிறார்கள். உண்மையில் இந்தச் சிறுகதை கிளப்பிய அலை அடங்க வெகுகாலம் ஆகுமல்லவா ? இல்லை இந்த அலை அடங்குமா?மனதை அலைக்கழித்தபடி இருக்குமல்லவா? சிறந்த சிறுகதையின் இலட்சணமே அதுதானே. அண்மைக் காலத்தில் சிறுகதைகளை இவ்வாறு எழுதச் சொல்கிறார்கள்.அதற்காக சிறிய கதைகளையல்ல என்பதையும் எழுதுபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தேடல்

மனிதமனம் என்பது எப்போதும் வெளிப்புறம் வேடிக்கை பார்ப்பது. அப்படிப் பார்த்ததை இன்னும் பெரிதாக உள்ளே கற்பனை செய்து கொள்வது. மனிதருக்குள் உலக விவகாரங்கள் இப்படித்தான் சிக்கிக்கொண்டு விதம்விதமாக பூதம் காட்டுகின்றன. மனம் கடும் சிக்கலுக்கு ஆளாகிறது. வேங்கடராமனின் ( ரமண மகரிசியின் இயற்பெயர்) பார்வை வெளியில் போகாமல் உள்ளுக்குள்ளேயே தங்கிவிட்டது. அந்த அனுபவத்திற்குப் பிறகு மரணம் பற்றிச் சிந்தித்து எது இறக்கிறது என்ற கேள்வி கேட்டு எது இறக்கவில்லையோ அதைத் தரிசனம் செய்தபிறகு அதை நன்றாக உணர்ந்து அனுபவித்தபிறகு... மனம் வெளியே போய் எந்த விவகாரத்திலும் சிக்காமல் திரும்பத் திரும்ப எதைப் பார்த்தானோ எதை உணர்ந்தானோ எது உள்ளே அசையாமல் எந்தவித குணமும் இல்லாமல் இருக்கிறதோ அதை வலுவாகப் பற்றிக்கொண்டது. இதை வெங்கடராமனுக்கு யார் சொல்லிக் கொடுத்தார்? அவனுக்குக் குரு என்று யாருமில்லை. தெய்வத்தையும் கை கூப்பி 'இது வேண்டும்' என்று கேட்கவில்லை. வெறுமனே 'தான் யார்?' என்று தன்னையே கேட்டான். உண்மையாகக் கேட்டான். சத்தியமான கேள்வியைக் கேட்டான். மிக உண்மையாக தனக்குள் என்ன நடக்கிறது என்று தானே தேடினான். சிந்தாமல் சிதறாமல் பார்த்தான். இது மிகப் பெரிய கொடுப்பினை. பூர்வ ஜென்ம வாசனை. பேரறிவாளனின் பேரருள்.

**பாலகுமாரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.தனுஷியா

# அடைக்கலம்

விடியலின் பயணத்துடன் சேர்ந்து பிஞ்சுக் குழந்தையின் அலறலும் சேர்ந்து காந்தி நகரைத் தூக்கத்தில் இருந்து கலைத்தன. கருமுகில் கூட விலக மனமின்றி வேடிக்கை பார்த்து நின்றது. வாயிற் படலையை விலக்கி கொண்டு பொன்னி ஓட பின்னால் நமச்சிவாயமும் பயணப்பட்டார்.

பொன்னி ஓடிச்சென்று தெருமூலையின் குப்பைத்தொட்டியை எட்டிப் பார்த்தாள். அதுக்கிடையில் ஒரு கூட்டமே கூடிவிட்டது. இது என்ன? காந்தி நகருக்கு வந்த சோதனை என ஒரு வயதான கிழவி தலையில் அடித்துக்கொள்ள, அட பொட்டப்பிள்ளையா? அதுதான் தூக்கி போட்டுவிட்டாள் என ஊருக்கே பெரிய மனிசன் சலித்துக் கொள்ள, பாவம் பிஞ்சு குழந்தை என்ன பாவம் பண்ணிச்சு என சிலர் வருந்திக் கொள்ள எதையும் காதில் வாங்காது பொன்னி முந்தானையால் குழந்தையை துடைத்து மார்போடு சாய்த்துக் கொண்டாள்.



எல்லாம் திருவிழாவுக்கு வேடிக்கை பார்க்க வந்த சனம் போல் நின்றனரே ஒழிய யாரும் முன்வரவில்லை. மனைவி அருகில் சென்ற நமச்சிவாயம் தன் இடுப்பில் கட்டியிருந்த சால்வையை அவிட்டு குழந்தைக்குப் போர்த்தி விட்டார். சிவந்து போன பூவுடல் பிஞ்சு இதழ்கள் அம்மா என அழைக்கத் தயங்கி நிற்கிறது. பெற்றவள் ஈனப்பிறவியாச்சே! பிறந்ததும் அனாதை எனும் முத்திரை குத்திச் சென்றாளே! இதற்கிடையில் கண்திறந்து இந்த கலியுகத்தைக் காணக் கூட அந்தப் பிஞ்சு மனம் விரும்பவில்லை போலும் மெல்ல முனகியது. ஊர் பெரிய மனிசன் ஆச்சிரமத்தில் சேர்த்துவிடலாம் நமசிவாயம் கொண்டு வா! என ஏவினார்.

நமச்சிவாயம் பொன்னியின் கணவன். தன்னம்பிக்கையை பொன்னிக்கு சொல்லிக் கொடுத்ததே அவர்தான். காந்தி நகரில் ஏழ்மையில் தவிக்கும் குடும்பமும் அதுதான். கொஞ்சம் கொஞ்சமாய் சேர்த்து கட்டிய குருவிக்கூடு தவம் இருந்து பெற்றெடுத்த இரண்டு ஆண் பிள்ளையள். கணவன் குழந்தைகள்தான் பொன்னியின் உலகம்.

ஊர் பெரிய மனிசன் கூறிய வார்த்தை ஊசியாய் பொன்னியை குத்தி கிழிக்க சடாரென திரும்பினாள். “இந்த பிஞ்சு என்ன பாவம் பண்ணிச்சு இப்படி தண்டனைக்கு மேல் தண்டனை குடுக்க” இவ எனக்காக படைக்கப்பட்டு எனக்காக அனுப்பி வைக்கப்பட்ட தேவதை. அந்த கடவுள் எடுத்துக்கொள் என்றால் எடுத்துக்கொள்ள வேணும் என்று மார்போடு இறுக அணைத்துக் கொண்டாள். தன் மனதில் பட்டதை மனிசி சுருக்கென புரியும்படி சொல்லிவிட்டாள் என நமச்சிவாயம் பெருமிதம் கொண்டார்.

சடாரென பக்கத்துவீட்டு மாரியம்மாள் “இருக்கிற இரண்டையும் பார்த்துக் கொள்ள வக்கில்லை இதுக்க இதுவேறயா?” என ஏளனமாய் பேச. ஒருநாளைக்கு இந்த தேவதையை இந்த காந்தி நகர் தூக்கிவச்சு கொண்டாடும். அப்போ பார்த்துக்கிறன் எண்டவள் விறுவிறுவென வீட்டுப் பக்கம் நடந்தாள்.

நாட்களும் நகர்ந்தன…

சைந்தவி! சைந்தவி!

ஓம் அம்மா வாரேன்! பள்ளிக்கு நேரமாச்சு தங்கம் சீக்கிரம் வெளிக்கிடம்மா என்று பொன்னி பரபரப்பாய் சைந்தவியை வெளிக்கிட வைத்தாள். மூத்தவன் ரமேஸ் அம்மா எனக்கு வசதிக் கட்டணக் காசு இண்டைக்கு வேணும் என புலம்ப ஆரம்பித்தான். இளையவன் தினேஸ் அம்மா எனக்கும் தந்தே ஆகணும் நேற்றும் பிறேயர்ல மறிச்சு பேசினாங்கம்மா என அழ ஆரம்பித்துவிட்டான். தம்பி இண்டைக்கு ஒரு நாள் மட்டும் சமாளிச்சுக்கோப்பா நாளைக்குப் பால் காசு வந்திடும் அதில உனக்கும் அண்ணாக்கும் தாரன். இண்டைக்கு பள்ளிக்கு போய் வாடா கண்ணா! என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல மறுப்பின்றி சரிம்மா நாளைக்குக் கட்டாயம் தரணும் என்று சொல்லிக்கொண்டே புத்தகப் பையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டான். கூடவே ரமேஸூம் புறப்பட்டுவிட்டான்.

முந்தானையில் முடிஞ்சு வைச்சிருந்த ஐம்பது ரூபாயை சைந்தவியின் கைகளில் திணித்தாள். என்னம்மா அண்ணன்களுக்கு இல்லை எண்டிட்டு எனக்கு தாரீங்க என கேட்டாள். அவங்க ஆம்பிளைப் பசங்கடி ரண்டு மூன்று பேச்சுத்தானே நாளைக்கு கொண்டே குடுத்திடலாம். நீ கொண்டு போய் குடு என செல்லக் கண்டிப்போடு கூறினாள்.

இந்த சமுதாயம் அவங்கள தலைக்கு மேல வச்சுக் கொண்டாடும். பொட்டைப் பிள்ளை உன்னைத் தான் கேள்விக்கு மேல கேள்வி கேப்பாங்க. இருந்தாலும் தைரியத்தோடு தலைநிமிர்ந்து நீ எப்பவும் இருக்கணும். சேற்றை வாரிப்போடக் கூடத் தயங்க மாட்டாங்க. உன் கவனம் எல்லாம் படிப்பிலேயே இருக்கட்டும் என அறிவுரை கூறி சரி! சரி! நேரமாச்சு கிளம்பும்மா என தெருமுனைவரை சென்று வழியனுப்பி வைத்தாள்.

மாரியம்மா வீட்டில அடுப்பு எரியுதோ! இல்லையோ! அவ வயிற்றில நெருப்பு எரியும் என்பது பொன்னி அறிந்ததே. திரும்பி வரும் போதே என்னதான் பொத்தி பொத்தி வளர்த்தாலும் ஒன்னும் பிரயோசனம் இல்ல என்றோ விட்டுப் போகத்தான் போகுது என சிரித்துக் கொண்டே குனிஞ்சு வீடு கூட்ட ஆரம்பித்தாள். பொன்னி யார் வம்புக்கும் போவதில்ல. தான் உண்டு தன் வேலையுண்டு எண்டு இருப்பவ. மாடி வீட்டு மகாலிங்கம் பண்ணையில் நமச்சிவாயத்தோடு சேர்ந்து தானும் வேலைக்குப் போக தொடங்கியதே சைந்தவி அவள் வாழ்க்கையில் வந்ததற்குப் பிறகுதான்.

காலம் வேகமாக உருண்டோடியது. சைந்தவி எங்கோ வெறிச்சு பாத்திட்டு இருந்தாள். தாங்கிக்கொள்ள முடியாத சோகம் தொண்டையை அடைத்தது. காரணம் அவளுக்குப் பதிவுத்தபாலில் வந்த கடுதாசிதான். அவ பிறப்பின் பழைய வரலாறு பக்கங்களில் பதியப்பட்டு இருந்தது. ஒரு நிமிஷம் எல்லாம் மாறிவிட்டது போன்ற உணர்வு. கோடிட்ட நீர்த்திரையை விலக்கி மெல்ல எழுந்தாள். படித்த பெண்ணாச்சே! எதையும் போட்டு மனச குழப்பாமல் புறப்பட ஆரம்பித்தாள்.

அண்ணன்களுக்கு செல்லத் தங்கச்சியாச்சே! ஐந்து வருட பிரிவு. கனத்த மனதோடு காந்தி நகர் நோக்கி பயணப்பட்டாள். காந்தி நகர் களைகட்டியது பெரிய மேடையின் மேல் விழாக்கோலம் பூண்டது. சேவல் கூவ முன்னம் வந்த மாடிவீட்டு மகாலிங்கம் கூட வேலைகளை இழுத்துப்போட்டு செய்கிறார். முதுமையிலும் முகம் ஜொலிக்க பஞ்சுத் தலையோடு பொன்னியும் நமச்சிவாயமும் இக் காட்சி கண்டு ரசித்து நின்றனர். ரமேஸூம், சுரேஸூம் மாலையோடு வந்து வாசலை நோக்கி ஆவலோடு காத்திருக்க ஊரே கூடிநின்றது.

இத்தனை வரவேற்பும் அழைப்பும் சைந்தவிக்கு தான். சொல்லப்போனால் விழாவே அவளுக்கு தான். வரப்போவது யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அல்லவா! அங்கே தெருமுனையில் கார் ஒன்று வருவதைக் கண்டு எல்லோரும் வரவேற்கத் தயாராகினர். மெல்லிய காட்டன் சாறியில் அழகோவியம் போல் வந்திறங்கியவள் இரு கைகளையும் கூப்பி வணக்கம் கூற மறக்கவில்லை. அவையடக்கம், தன்னடக்கம் இரண்டும் நிரம்பி வழியும் சைந்தவியை கண்டு ஊரே பெருமிதம் கொண்டது. வந்திறங்கிய சைந்தவியின் கண்கள் முதலில் தேடியது தன்னைச் சுமந்த தெய்வங்களையே.

ஓரமாய் கூட்டத்தோடு கூட்டமாய் நின்ற பொன்னியும் நமச்சிவாயமும் மகளின் பார்வையின் அழைப்பை அறிந்து வர இருவர் கால்களில் விழுந்தவள் ஆசிர்வாதம் பண்ணுங்கள் என வேண்டி அவர் பாதத்திற்கு நீர்தாரைகளைப் பரிசளித்தாள். குனிந்து நல்லா இரும்மா என்று தூக்கிவிட்டனர் இருவரும். அண்ணன்கள் ஓடிவந்து மாலையைப் போட்டுத் தங்கையை மேடைக்கு தூக்கியே கொண்டு சென்றனர். இந்தப் பாசமழையை எதிர்பார்த்து வந்தவளின் மனம் மேலும் கனத்தது. சமாளித்துக் கொண்டு இருக்கையில் அமர்ந்தாள்.

பொன்னாடை போர்த்தி கௌரவிக்க அழைக்கப்பட்ட போது அவள் தன் தாய் தகப்பனை மேடைக்கு வருமாறு கேட்டுக் கொண்டாள். மெல்லிய தளர்நடையுடன் பொன்னி நமச்சிவாயத்தைத் தாங்கியபடி மேடையை நெருங்கினாள். முதுமை வெளிச்சம் போட்டுக் காட்டியது. சட்டென காலில் விழுந்தவள் அந்த பொன்னாடையை இருவருக்கும் போர்த்தி கைகூப்பினாள். இந்த தெய்வங்கள் இல்லையென்றால் நான் ஒரு அனாதை ஆச்சிரமத்தில் இருக்க வேண்டியவள் என அவள் சொல்வதைக் கேட்டு இருவருக்கும் ஒரு கணம் மூச்சு நின்றது.

கண்ணீர்த் திரையை விலக்கி இருவரையும் அணைத்துக் கொண்டவள் பத்து மாசம் சுமக்கலன்னாலும் ஏம்மா என்ன அண்ணன்களுக்கு சமானா பிரிச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு. குணறுபேஸ்

பாக்காம ஒருபடி மேலயே பாத்துக்கிட்டீங்க என கேட்டு விம்மி அழுதாள். பொன்னி அவ நெத்தியில் முத்தமிட்டு நீ எங்களுக்கு வரமா கிடைச்ச சாமிம்மா. அடுத்த ஜென்மமுன்னு ஒன்னு இருந்தா அதில உங்க வயித்தில பிள்ளையா பிறக்கணும்மா என அணைத்துக் கொள்ள, அதுக்கென்ன என் தங்கமே! அணைத்துக் கொண்டனர்..

**கா**ந்தி நகரே மேடையில் நிகழும் பாசப்போராட்டத்தைக் கண்டு பிரமித்துபோய் நின்றது. அதனை ஏக்கத்தோடு இருவிழிகள் பார்த்துத் துடித்தன.

**சை**ந்தவி முகத்தில் அவ்வளவு சந்தோஷம் குடிகொண்டிருந்தது. இன்று எனக்கு இந்த மதிப்பு, மரியாதை கிடைக்க நீங்கதான் காரணம். எனக்காக நெடுங்கால கனவு வீட்டை விலைபேசி விற்று இந்த படிப்பை கொடுத்து இன்றைக்கு நீதிபதி சைந்தவி எனும் பட்டத்தையும் கொடுத்து என்னை உயரச் செய்த உங்களுக்கான பரிசு வாருங்கள் என அருகில் இருந்த நமச்சிவாயம் சிறுக சிறுக சேர்த்துக் கட்டிய குருவிக்கூட்டை அடைந்தாள். வீட்டின் அமைப்பே மாறி மாடிவீடாக உயர்ந்துஇருந்தது. இனி இதுதான் நமது இருப்பிடம் என அன்னையை அணைத்துக் கொண்டாள். அண்ணன்கள் கண்களை துடைத்துக் கொண்டனர். ஊரே சைந்தவியை தூக்கி கொண்டாடியது. பொன்னி மாரியம்மாள் பக்கம் பார்வையை திருப்பினாள். அவள் தலையை குனிந்து கொண்டாள். இனி காந்தி நகர் அடைக்கலம் கொடுக்கும்.

# சிட்டுக் குருவி

**கோ**பாலப்பிள்ளை வாத்தியாருக்குப் பத்து வருடங்களுக்குப் பின்பு கடவுளுடைய அருங்கொடையாகக் கொடுக்கப்பட்டவன்தான் சுதாகரன். திருமணமாகிப் பத்து வருடங்களிலும் பிள்ளைப் பாக்கியம் வேண்டிப் போகாத கோயிலுமில்லை கும்பிடாத தெய்வமும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் சுதாகரன் பிறந்து வளர்ந்த தாய் நாட்டிலே பத்தொன்பது வயது வரைக்கும்தான் வாழ் வதற்கு அவனுக்குக் கொடுப்பனை இருந்தது அல்லது அவனுடைய விதிப்பயன் அப்படியாய்அமைந்திருந்தது.

**நா**ட்டிலே ஏற்பட்ட சூழ்நிலையினால் ஆங்காங்கே சுற்றிவளைப்புக்களும் கைதுகளும் காணாமல் போதலும் தலைவிரித்துத் தாண்டவம் ஆடின காலம் அது என்பதால் சுதாகரன் தனது உயர்தரக் கல்வியைச் சீராகத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. "நீ படிக்காட்டால்பரவாயில்லை. வெளியிலே போய் உயிரோடு வாழ்ந்தால் மட்டும் போதும்" என்று கூறி கோபாலப்பிள்ளை வாத்தியார் சுதாகரனை பிரான்சிற்கு அனுப்பி வைத்தார். கோபாலப்பிள்ளை வாத்தியாரின் தங்கை திருமணமாகிக் குடும்பத்தோடு பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வருகிறார். தங்கையிடம் தொலைபேசியிலே பேசிய கோபாலப்பிள்ளை நாட்டின் நிலைமையையும் பாதுகாப்புப் பிரச்சினையையும் எடுத்துக் கூறி சுதாகரனை பிரான்சிற்கு எடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டிருந்தார். அண்ணனின் மகனுக்கு உதவி செய்ய வேண்டிய கடப்பாடு தங்கைக்கு இருந்த காரணத்தினால் ஒருமாத கால இடைவெளியிலேயே சுதாகரன் பிரான்ஸ் செல்வதற்கான ஏற்பாடுகளெல்லாம் நிறைவேறியது. தங்களது மகன் உயிர்தப்பி வாழ்ந்தால் மட்டும் போதுமென்று நினைத்த கோபாலப்பிள்ளை வாத்தியாரும், மனைவி சகுந்தலாவும் விரும்பியோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பாமலோ அவர்களது ஒரே மகனை பிரான்சிற்கு அனுப்பி வைத்தனர்.

பிரான்சிலுள்ள மாமியின் வீட்டிற்கு வந்திருந்த சுதாகரன் ஒரு சில மாதங்கள் பிரான்ஸ் வாழ்க்கை முறைக்கு இடர்பட்டாலும் காலவோட்டத்தில் அதற்குப் பழகி விட்டான். காலச்சக்கரம் உருண்டோடிய நாட்களில் முப்பது வருடங்களுக்குப் பின்னர் யுத்தம் முடிவிற்கு வந்திருந்தது. யுத்தம் முடிவடைந்ததால் புலம் பெயர்ந்து வாழ்ந்தவர்கள் இலங்கைத் தாய் நாட்டை நோக்கிப் படையெடுத்து வரத் தொடங்கினர். அந்நாட்களிலேதான் சுதாகரனும் தனது தாய் நாட்டைப் பார்ப்பதற்காகவும், பல வருடங்களின் பின் தன் பெற்றோரை சந்திக்கும் ஆவலுடனும் மட்டக்களப்பிற்கு வந்திருந்தான்.

சிறுபிள்ளையாய் இருந்தபோது அவன் செல்லப் பிள்ளையாய் வாழ்ந்த வீடு எவ்வித மாற்றமுமின்றி இன்றும் அப்படியேதான் இருந்தது. ஆனால் அவன் சிறுபிள்ளையாய் இருந்தபோது அவன் வீட்டிலே வசித்து வந்த சிட்டுக்குருவிகள் மட்டும் இல்லாமல் போனது அவனது சிந்தனையில் ஏதோ குழப்பத்தை உண்டு பண்ணியிருந்தது. வீட்டிலே இருந்த சிட்டுக்குருவிகள் பற்றி தாய் தந்தையரிடம் கேட்டபோது காலவோட்டத்திலே சிட்டுக்குருவிகள் இல்லாமல் போய் விட்டனவென்றும் நம்முடைய வீட்டில் மாத்திரமல்ல அயல் வீடுகள் எவற்றிலுமே இப்போது சிட்டுக்குருவிகள் இல்லை என்றும் கூறினர். இதைக் கேட்டபோது சுதாகரனுக்கு அவனது உள்ளத்தில் ஏற்பட்ட சோக உணர்வுகளை எவ்வாறு வெளிக்காட்டுவதென்றே தெரிந்திருக்கவில்லை. சிட்டுக் குருவிகள் தனது வீட்டிலே இல்லாத சோகத்தின் மிகுதியினால் ஒருசில இரவுகள் நித்திரையில்லாமலே அங்கலாய்த்திருக் கிறான். ஒருசில நாட்கள் அவன் ஒழுங்காக சாப்பிட்டதாகவும் இல்லை. கிராமத்துச் சமையலும், உறைப்புச் சாப்பாடும் பிள்ளையின் வாய்க்கு ஒத்து வரவில்லை என்று பெற்றார் பேசிக் கொண்டனர். அன்று இரவும் நித்திரையின்றி அவஸ்தைப்பட்ட சுதாகரன் காலை எழுந்தவுடன் தனது இளமைக்காலத்தில் நேசித்து வந்த சிட்டுக்குருவிகள் பற்றியும், அதன் குறும்புகளை ரசித்து மகிழ்வுற்ற இரசனைகளைப் பற்றியும் சிந்திக்கலானான். அவற்றில் உடல் முழுவதும் சற்றுக் கருமையான பிறவுண் நிறமான குருவிக்கு அதன் முகத்தின் கீழ்ப்பகுதியில் ஒரு சிறுபகுதி கருமையாக இருக்கும். அந்தக் குருவியை ஆண்குருவி என்றும், வெளிறிய மண் நிறத்தில் காணப்படும் குருவியை பெண் குருவி என்றும் பெற்றார் சொல்லிக் கொடுத்திருந்தனர்.

சிட்டுக்குருவிகள் தனது வீட்டின் வரவேற்பறையின் நடுப்பகுதியில் ஒரு சிறு அட்டைப் பெட்டிக்குள் வாழ்வதும் உணவு தேடி அவை வெளியில் சென்றாலும் சில பல நிமிட நேரத்தினுள் மீண்டும் திரும்பி வந்து கீச் கீச் எனச் சத்தமிட்டவாறு அட்டைப் பெட்டிக் கூட்டிற்குள் நுழைவதும் எப்போதும் அந்தச் சிட்டுக்குருவிகள் சோடியாகவே வாழ்வதும் அவை காலத்திற்குக் காலம் குஞ்சு பொரித்து குஞ்சுகள் வளர்ந்து இறக்கை அடித்துப் பறக்கும்வரை கீச் கீச் என்று சத்தமிடுவதும் அதற்கு தாய்க் குருவியும், தந்தைக் குருவியுமாக வெளியில் சென்று உணவைத் தனது அலகுகளிலே கொண்டுவந்து கொடுப்பதுவும் அவை முட்டையிடும் காலம் தொடங்குவதற்கு முன்பதாக வெளியில் சென்று உலர்ந்த சிறிய புற்களை தனது சிறிய அலகுகளினாலே எடுத்து வந்து அவைகள் வாழ்கின்ற அட்டைப் பெட்டிக்குள் வைத்து முட்டை இடுவதும் வெளியில் சென்று அவை உணவை எடுத்து வந்தாலும் பெரிய பானைக்குள் அம்மா வைத்திருக்கும் அரிசியில் ஒரு பிடி எடுத்துக் கொண்டு வந்து எங்கள் வீட்டு சாப்பாட்டு மேசையில் வைப்பதுவும் பெரிய வாளிக்குள் அம்மா அடைத்து வைத்திருக்கும் பருப்பிலும், உழுந்திலும் ஒரு பிடியை எடுத்து வந்து மேசையில் வைப்பதுவும் அவற்றோடு ஒரு சிறிய தட்டில் சிட்டுக்குருவிகள் குடிப்பதற்கு நான் தண்ணீர் வைப்பதுவும் சில வேளைகளில் அது தண்ணீரைத் தட்டி விட்டு பின்னர் கீச் கீச் என்று கத்துவதும் மீண்டும் நான் அதிலே தண்ணீர் ஊற்றி வைப்பதுவும் பருப்பையும், உழுந்தையும், அரிசியையும் அது போட்டி போட்டுக் கொண்டு கொத்திக் கொத்தி தின்பதுவும் எங்கள் வீட்டிலே அடிக்கடி கேட்கின்ற கீச்சிடும் ஒலி எப்போதும் எங்கள் காதுகளிலே ஒலித்துக் கொண்டிருப்பதுவும் இப்போது எங்கே மறைந்து போனது?

தனது மகன் சுதாகரன் சிறிய பராயத்திலிருந்து நல்ல காட்சிகளைப் பார்க்கவேண்டும் நல்ல விடயங்களைக் கேட்க வேண்டும் நல்ல வார்த்தைகளைப் பேச வேண்டும் என்னும் சிந்தனை கோபாலப்பிள்ளை வாத்தியாருக்கு இருந்தது. அதன் காரணத்தினால் மூன்று குரங்குகள் அருகருகே அமர்ந்திருப்பதுவும் அதில் முதல் குரங்கு கண்களை தனது கைகளினால் மூடியிருப்பதுவும் அதற்குக் கீழே 'தீயனவற்றைப் பாராதே' என்று எழுதப்பட்டிருப்பதுவும், இரண்டாவது குரங்கு தனது இரண்டு கைகளினாலும் காதுகளை மூடியிருப்பதும் அதன் கீழே 'தீயவனவற்றைக் கேளாதே' என்னும் வாசகம் எழுதப்பட்டிருப்பதுவும், மூன்றாவது குரங்கு தனது இரண்டு கைகளினாலும் தனது வாயை மூடிக்கொண்டிருப்பதுவும் அதன் கீழே 'தீயவனவற்றைப் பேசாதே' என்று எழுதியிருப்பதுவுமான கருத்துப் படத்தை வீட்டின் வரவேற்பறையில் சிட்டுக் குருவியின் கூட்டிற்கு எதிர்த்திசையிலே ஒட்டி வைத்திருந்தார். அந்த கருத்துப் படத்திலே எங்கள் வீட்டுச் சிட்டுக் குருவிகள் பறந்து வந்து

அந்தக் குரங்குகளையும், வாசகத்தையும் கொத்துவதும் அந்தச் சேட்டைகளை சுதாகரனும் தாய் தந்தையரும் பார்த்து ரசிப்பதுவும் இப்போது இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டதே என்னும் ஏக்கச் சிந்தனையும் அவனுக்குள் வந்து சென்றது.

அப்படியாய் கடந்து வந்த நாட்களில் சிட்டுக் குருவிகள் முட்டை இட்டு தனது இனத்தைப் பெருக்கிக் கொண்டு நான்கு குருவிகளானதும் இன்னும் ஒரு பெட்டியை எடுத்து அந்தக் கூட்டிற்கு அருகில் அப்பா பொருத்திவிட அதில் இரண்டு குருவிகள் நாளடைவில் புதிய கூட்டில் வாழ ஆரம்பித்ததுவும் அவனது ஞாபகத்தில் வந்து சென்றது.

சிறுபிள்ளையாய் அவன் பாடசாலையில் படிக்கும் நாட்களில் அவனது தந்தை கோபாலப்பிள்ளை வாத்தி யாருடன் நடந்து பாடசாலைக்குச் செல்லும்போது வீட்டிலிருந்த சிட்டுக்குருவிகளும் தங்களைப் பின் தொடர்ந்து பறந்து வந்து மரத்திற்கு மரம் தாவி பிரதான வீதிச் சந்திவரை வந்து அவர்களை வழிஅனுப்பி வைப்பதுவும் எத்தனை மகிழ்வான நினைவுகளாய் சுதாகரனின் உள்ளத்தில் வந்து மோதுகின்றன.

வேளாண்மை அறுவடைக்காலம் வந்துவிட்டால் கோபாலப்பிள்ளை வாத்தியார் கள்ளியாப்பத்தை கண்டப் பகுதியிலே செய்கை பண்ணியிருக்கும் வேளாண்மையி லிருந்து எமது வேலையாட்கள் பொதி வண்டியிலே கொண்டுவந்து எங்கள் வீட்டுக் களஞ்சிய அறையிலே அடுக்கி வைக்கும் நெல்மூடைகளில் அந்தச் சிட்டுக் குருவிகள் தங்கள் சிறிய அலகுகளினாலே கொத்தித் துளையிட்டு பால் மணம் மாறாத நெல்மணிகளை எடுத்து வந்து தங்கள் கூடுகளில் வைப்பதுவும் தங்கள் குஞ்சுகளுக்குக் கொடுப்பதுவும் அந்தக் காட்சியைப் பார்க்கும்போதும், சிட்டுக்குருவிகளின் அத்தகைய குறும்புகளை நினைக்கும் போதும் மனதில் பொங்கும் ஆனந்தம் இப்போது முப்பது வருடங்களின் பின்னர் எங்கே போனது?

சிட்டுக்குருவிகளின் இந்த இனிமையான நினைவுகளைச் சிந்திக்கும்போது அன்றொருநாள் தங்கள் வீட்டில் நடந்த சோகமான சம்பவமும் அவனுக்கு ஞாபகத்தில் வந்தது. வீட்டின் வரவேற்பறையிலிருந்து அந்த சம்பவத்தை சிந்தித்துப் பார்க்கும்போது கண்களிலிருந்து கண்ணீரும் வழிந்தோடியது. அந்தச் சம்பவம் இதுதான்.

அந்நாட்களில் எல்லா வீடுகளிலும் மின்சார வசதி இருக்கவில்லை. வசதி படைத்த ஒருசில வீடுகளில்தான் மின்சார வசதி இருந்தது. அந்தக் கிராமத்தில் அவர்களது வீட்டில் மட்டும்தான் அந்நாட்களில் மின்சாரவசதி இருந்தது. கோபாலப்பிள்ளையின் வீட்டிலே மின்சார வசதி இருந்த காரணத்தினால் நாளடைவில் அவர்கள் மின்விசிறிப் பாவனையையும்ஆரம்பிக்கலாம் என எண்ணினர். அன்று தான் கோபாலப்பிள்ளை வாத்தியார் ஒரு மின்விசிறியை விலை கொடுத்து வாங்கி வந்திருந்தார். அன்று சுதாகரனின் பிறந்த தினமாகவும் இருந்தது. அன்றைய தினமே மின் விசிறியை வீட்டிலே பொருத்தத் தெரிந்த ஒருவரை வர வழைத்து வீட்டின் வரவேற்பறையிலே மின்விசிறியைப் பொருத்தியிருந்தனர். அது அவர்களுக்குப் புதிய அனுபவமாக இருந்த காரணத்தினால் மின்விசிறியைப் பொருத்துவதில் எல்லோரும் ஆர்வமும், மகிழ்ச்சியும் காட்டினர்.

மின்விசிறியை வரவேற்பறையிலே பொருத்த வந்தவர் ஒருசில மணி நேரத்தினுள் அதனை வரவேற்பறையின் நடுவிலே பொருத்திவிட்டு ஆழியை அழுத்தியபோது மின்விசிறி சுழன்று அவர்களை மகிழ்ச்சிப்படுத்தியது. தனது பிறந்த தினத்திற்கு அப்பா தந்த பரிசு என்றும் சுதாகரனுக்குச் சொல்லப்பட்டது. மின்விசிறி சுழலத் தொடங்கி இப்போது அரை மணிநேரம் ஆகிவிட்டது. வீட்டிலே இருந்து வெளியே சென்றிருந்த சிட்டுக்குருவிகள் இயல்பாகவே வீட்டின் நுழைவாயிலினூடாக மண்டபத்தினுள் நுழைந்தன. மின்விசிறி பற்றி எதுவும் அறிந்திராத காரணத்தினால் சுழன்று கொண்டிருந்த ஒரு மின்விசிறியில் ஒரு சிட்டுக்குருவி அடிபட்டு கீழே விழுந்து கீச் கீச் என்று சத்தமிட்டு துடிதுடித்து இறந்தது. வழமைக்கு மாறாகவே சிட்டுக் குருவிகள் சத்தமிடுவதைக் கேட்டு சுதாகரனின் அப்பாவும் அம்மாவும் ஓடிவந்து பார்த்தபோது சிட்டுக்குருவி ஒன்று மின்விசிறியில் அடிபட்டு இறந்தது தெரிய வந்தது. இறந்து கிடந்த குருவிக்கு அருகில் அதன் துணைக்குருவி சிறகை அடித்து பதைபதைத்து கீச் கீச் என்று சத்தமிட்டு வேதனைப்பட்டது. கோபாலப்பிள்ளை வாத்தியாருக்கு தான் ஏதோ கொலைக்குற்றம் செய்துவிட்டதைப் போல உள்ளத்தில் உறுத்தியது. கோபாலப்பிள்ளை வாத்தியாரும், மனைவி சகுந்தலாவும், சுதாகரனும் கண்ணீர் விட்டழுதனர். இதற்கிடையில் சுழன்று கொண்டிருந்த மின்விசிறியும் நிறுத்தப்பட்டது. யாரதை உடனடியாக நிறுத்தியது என்று சுதாகரனுக்குச் சரியாக ஞாபகமில்லை.

இறந்து கிடந்த சிட்டுக்குருவியை கோபாலப்பிள்ளை பக்குவமாய் ஒரு பழந்துணியினால் எடுத்து இன்னுமொரு வெள்ளைத் துணியில் சுற்றி முற்றத்தில் நின்ற மல்லிகைக் கொடியின் கீழ் குழி தோண்டிப் புதைத்தார். கோபாலப் பிள்ளை வாத்தியாரினதும், மனைவி சகுந்தலாவினதும், சுதாகரனினதும் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. இவற்றையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த இணைக்குருவி தனது இறக்கையை மார்போடு அடித்து கீச் கீச் என்று சத்தமிட்டு பதைபதைத்துக் கொண்டு அங்குமிங்கும் தாவித் தாவிப் பறந்து திரிந்தது. இறந்து விட்ட சிட்டுக்குருவியைக் குழி தோண்டிப் புதைத்து விட்டாலும் அந்த இணைக்குருவி இருள் சூழும்வரை தனது சோடிக்குருவி புதைக்கப்பட்ட குழிக்கு சரிநேராக மல்லிகைக்

19 ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. தயாளன்

# கரும்பலகை

## அத்தியாயம் 10

கபிலனுக்கு மிகுந்த சந்தோசம். வேலை கிடைத்து விட்டது. அதுவும் அவன் விரும்பிய ஆசிரியத் தொழில். உருத்திரா மாவத்தையிலிருந்து காலி வீதிக்கு வருகிறான். இறக்கைகட்டிப் பறப்பதுபோல் இருக்கிறது.

வெள்ளவத்தையில் எப்போதும் தமிழ் உரையாடல்கள் கேட்டுக் கொண்டேயிருக்கும். சில கடைகளில் தமிழ்ப் பாடல்களும் கேட்கும். வெள்ளவத்தை தமிழ்ப் பிரதேசமா என்கின்ற ஐயம் யாருக்கும் ஏற்படும். வெள்ளவத்தையில் உள்ள சந்தையில் உள்ள சிங்கள இனத்தவர்களும் தமிழில்தான் உரையாடுவார்கள். அங்கு சாமான் வாங்க வருபவர்களில் 99 வீதமானவர்கள் தமிழர்களே. தமிழர் பேசும் தமிழைவிட சிங்களவர்கள் பேசும் தமிழ் கேட்கச் சங்கீதம் போலிருக்கும்.

கபிலன் சந்தோசத்தில் கால்போன போக்கில் நடந்து கொண்டிருந்தான். அவனுடைய எண்ணங்கள் ஆசிரியத் தொழிலையே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. ஆசிரியத் தொழிலில் பல விடயங்களைச் சாதிக்க வேண்டுமென்பது அவனது கனவு. அதற்கேற்ற பாடசாலையும் அவனுக்குக் கிடைத்திருந்தது.

இந்த நல்ல செய்தியை நண்பனுக்கும் தகப்பனுக்கும் அறிவிக்க வேண்டுமென்று மனதில் நினைத்துக் கொண்டு வெள்ளவத்தையில் உள்ள விஜயலட்சுமி புத்தகசாலைக்குச் சென்றான்.

வெள்ளவத்தையில் உள்ள ஒரேயொரு தமிழ்ப் புத்தகசாலை இதுவாகும். இதன் உரிமையாளர் மிகப் பெரிய எழுத்தாளர் கணேசலிங்கம்தான். கபிலன் அந்தக் கடைக்குள் சென்றபோது அங்கு இருந்தவர் கணேசலிங்கம்தான். கபிலனுக்கு அவர்தான் புகழ்பெற்ற எழுத்தாளர் என்று தெரியாது. அந்தப் புத்தக சாலையில் இருக்கும் தொலைபேசியை எல்லாரும் பணம்கொடுத்து பாவிப்பது வழக்கம். கடைக்குள் சென்ற கபிலன்



" நான் ஒருக்கால் தொலைபேசியைப் பாவிக்கலாமோ " என்று கேட்டான். அவர் தொலைபேசி இருக்கும் பக்கம் கையைக் காட்டினார். தொலைபேசியை எடுத்து முதலில் தகப்பனைக் கூப்பிடுவதற்காக பக்கத்து வீட்டு இலக்கத்தைச் சுத்தினான்.

"நான் கபிலன் கதைக்கிறன். அப்பாவை ஒருக்காய் கூப்பிட்டு விடுவியளோ?"

" கொஞ்சம் பொறு தம்பி வாறன்" ஒரு வயோதிபக் குரல் மறுமுனையில்.

கொஞ்ச நேரத்தில் கபிலனின் அப்பா வந்துவிட்டார்.

" அப்பா எனக்கு அந்த பெண்கள் பாடசாலையில் வேலை கிடைச்சிட்டுது." என்றான் கபிலன்.

" நல்லது. தம்பி கவனமாக இருக்கவேண்டும். நீ படிப்பிக்கப்போறது பெண்பிள்ளைகள் படிக்கிற பாடசாலை. " என்றார் மறுபக்கத்தில் தகப்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உங்கை நீங்களும் கவனமாய் இருங்கோ.. பிரச்சினை கூடுதெண்டு இஞ்சை கதைக்கினம்" என்றான் கபிலன்.
" அதெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுவன் நீ கவனமாய் இரு" என்று தகப்பன் கூற " சரி அப்பா" என்று கூறிவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டான்.
தொலைபேசி கதைத்ததற்கான பணத்தை அவரிடம் கொடுக்கும்போது " தம்பி என்ன மாஸ்டர் வேலை கிடைச்சிட்டுது போலை." என்றார் காசாளரிடத்தில் இருந்த கணேசலிங்கம்.
" ஓம் பாருங்கோ உந்த முன் றோட்டிலை இருக்கிற பெண்கள் பாடசாலையிலைதான். இண்டைக்குத்தான் நேர்முகப் பரீட்சை நடந்து முடிவு சொன்னவை."
" ம்.. நல்லது.. தம்பி என்ன பாடம் படிப்பிக்கப்போறீர்" என்று கேட்டார் அவர்.
" நான் கணிதமும் பௌதீகமும்தான் படிப்பிக்கப்போறன்" என்று கபிலன் சொல்ல
" நல்லது தம்பி. அடிக்கடி இங்கை வாங்கோ" என்று அவர் கூறவும் கபிலன் நண்பனுக்குச் சொல்லப் புறப்பட்டான். புத்தகசாலையைவிட்டு வெளியே வந்த கபிலன் தன்னுடைய அறையை நொக்கிப் புறப்பட்டான். அனேகமாக அவனது நண்பன் வந்திருப்பான் என்று மனதிற்குள் கணக்குப்போட்டுக்பொண்டு காலடி எடுத்து வைக்க அவன் பெயரை யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். கூப்பிட்டது வசந்திதான்.
" என்ன கபிலன் வேலை கிடைச்சதும் என்னைக் காய் வெட்டி விட்டிட்டீர் போல " என்றாள் வசந்தி.
" அப்பிடி இல்லை.. உம்மைத் தேடினனான் காணயில்லை. வகுப்பிலை இருப்பீரோ என்டு நினைச்சு.. பேசாமல் வந்திட்டன்.." என்றான்.
" நான் சும்மா பகிடிக்குச் சொன்னனான். எப்பிடிப் போச்சுது. அந்த வகுப்பு நீங்கள் சொன்ன மாதிரி குழப்படியில்லை. ஒழுங்காக இருந்திச்சினம். நீங்கள் அந்த வகுப்புக்கு ஏதும் பாடம் எடுக்கிறனீங்களோ?" என்றான் கபிலன்.
" அதிருக்கட்டும் அதென்ன 'நீங்கள்' என்று என்னைச் சொல்லிறியள். நீ என்டு கதையும். நான் அந்த வகுப்புக்குப் பாடம் எடுக்கிறயில்லை. மற்ற ரீச்சர்மார் அப்பிடிச் சொல்லிறவை. பள்ளிக் கூடத்திலையே 10 வகுப்புத்தான் குழப்படி என்று." என்றாள் வசந்தி.
" எனக்கெண்டால் அப்பிடித் தெரியேல்லை. போகப் போக தெரியும்தானே. நான் ஒண்டு கேட்க வேணுமெண்டிருந்தனான். நீர் தனியவே இருக்கிறீர்.. அல்லது ஆரும் சொந்தக் காரரோடையே இருக்கிறீர்?" என்று கபிலன் கேட்க
" நான் தனியத்தான். ஒரு அறை வாடகை வாடகைக் கெடுத்துத்தான் இருக்கிறன். சொந்தக் காரரோடை இருந் தால் இப்பிடி உம்மோடை நிண்டு கதைக்கேலுமே. நானே சமையல். வீட்டுக் காரர் நல்லவை. ஏன் இதைக் கேட்கிறீர்?" என்றாள் வசந்தி.
"ஒண்டுமில்லைச்சும்மா கேட்டன். இப்ப சாப்பிட்டிட்டீரோ? அல்லது இனிப் போய்த்தான் சமையலோ?" என்று கபிலன் கேட்க
" இனிமல்தான்.."
" அப்ப இண்டைக்கு எங்களோடை சாப்பிடுமன்?" என்றான்.
" எங்களோடை எண்டால் வேறை யார்?" என்று வசந்தி கூறிவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.
கபிலன் சிரித்துக் கொண்டே
" வேறையார் சுந்தரேசன் அறைக்கு வந்திருப்பான். போய் அவனையும் கூட்டிக் கொண்டு வருவம்" என்று கூறிவிட்டு கபிலன் நடக்க வசந்தியும் கூட நடந்தாள். அவர்கள் போய்க் கொண்டிருக்கும்போது வழியில் வசந்தியோடு படிப்பிக்கிற ஆசிரியை வருவதைக் கண்டதும் 'இண்டைக்கு முடிஞ்சுது' என்று வசந்தி மனதிற்குள் நினைத்துக் கொண்டாள். அந்த ஆசிரியையும் எதுவும் சொல்லாமல் ஒரு கொடுப்புச் சிரிப்போடு இவர்களைக் கடந்து கொண்டிருந்தாள்.
" கபிலன் உதிலை போறவவும் அங்கைதான் படிப்பிக்கிறவ. ஒரு கொடுப்புச் சிரிப்போடை போறா" என்றாள் வசந்தி.
" ஏன்?" என்றான் கபிலன்.
" நீர் என்னோடை கதைக்கிறதைப் பார்த்து வேறைமாதிரிக் கதைக்கினம்'" என்றாள்.
" அப்ப இனிமல் நாங்கள் கவனமாய் இருக்கவேணும்" என்று கபிலன் கூறியதும் அந்தப் பதில் வசந்திக்குப் பிடித்த தாக இருக்கவில்லை. வசந்தி எதிர்பார்த்தது " பரவாயில்லை கதைக்கட்டும" என்று சொல்வானென்பதே. அதற்குப் பிறகு வசந்தி பெரிதாக ஒன்றும் கதைக்கவில்லை.

அறை வந்துவிட்டது. வசந்தியை வெளியே நிற்கச் சொல்லிவிட்டு உள்ளே போய் சுந்தரேசனுக்கு தனக்கு வேலை கிடைத்ததைச் சொல்லி
" வா சாப்பிடப் போவம்" என்று அழைத்துக் கொண்டு வந்தான்.
வெளியே வந்த சுந்தரேசன் வசந்தியும் நிற்பதைப் பார்த்து " அட வசந்தியும் சாப்பிட வாறாவோ?" என்று கேட்டான்.
" ஓ.. வழியிலை கண்டன்.. பின்ன அவவையும் வரச் சொல்லிக் கூட்டிக் கொண்டு வந்தன்." என்றான் கபிலன்.
மூவரும் சேர்ந்து வெள்ளவத்தையில் அவர்கள் வழக்கமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடும் காந்தி லொட்ஜ் என்ற சைவக் கடைக்குப் போனார்கள்.

இவர்கள் வாடிக்கையாளர்களானதால் வரவேற்பு பலமாக இருந்தது. இம் முறை இவர்களோடு ஒரு பெண்ணும் வந்ததால் வழக்கமாக இவர்களுக்குப் பரிமாறும் செல்வன் என்ற பையன் கபிலனைப் பார்த்து
“ என்ன சார் கல்யாணம் முடிஞ்சுது போலை சொல்லாமல் கொள்ளாமல் செய்து போட்டியள்” என்றான்.

கபிலனும் சுந்தரேசனும் திடுக்கிட்டுவிட்டார்கள். தங்களைச் சுதாகரித்துக் கொண்டு
“ ஏ.. செல்வன் அப்பிடி ஒண்டும் இல்லை. இவ என்னோடை படிப்பிக்கிறவ.” என்று அவளை அறிமுகம் செய்து வைத்தான். ஆனால் வசந்திக்கோ உள்ளுக்குள் ஏதோ ஊர்வது போன்ற உணர்வேற்பட்டது. கோபத்திற்குப் பதிலாக உள்ளுக்குள் அவளையறியாமல் சந்தோசப்பட்டாள். செல்வன் அப்பிடிக் கதைத்ததற்காக கபிலன் வசந்தியிடம் மன்னிப்புக்கேட்டான்.

அதற்கு வசந்தியும் சிரித்தபடி அதனால் ஒன்றுமில்லை என்று சமாளித்துக் கொண்டாள். மூவரும் தங்களது பல்லகலைக் கழகக் காலத்துக் கதைகளை மீட்டல் செய்து சிரித்துக் கொண்டு உணவருந்தினார்கள்.
உணவருந்தி முடிந்ததும் கபிலனும் சுந்தரேசனும் வசந்தியை அவள் இருக்கும் வீட்டிற்கு முன்னால் கொண்டு சென்று விட்டுவிட்டு திரும்பினர்.
திரும்பி வரும் வழியில் கபிலன் சுந்தரேசனைப் பார்த்து
“ மச்சான் பிளாசாவிலை ஒரு படம் பார்ப்பமே” என்று கேட்டான்.
சுந்தரேசனும் சம்மதிக்க இருவருமாகப் பிளாசாவை நோக்கிச் சென்றனர். போகும் வழியில்
“ மச்சான் வசந்தியைப் பற்றி என்ன நினைக்கிறாய்?” சுந்தரேசன் திடீரென்று இப்படிக் கேட்டதும் கபிலன் அவனை வியப்போடு பார்த்து
“ இதென்ன கேள்வி மச்சான்.. எங்களோடை ஒண்டாய்ப் படிச்சவள் இப்ப என்னோடை ஒண்டாய் வேலை செய்யப் போறவள். அவ்வளவுதான்.”
“ இல்லைக் கேட்டன். உனக்கேதும் வேறை ஐடியா இருக்கோ என்று அறிய” என்றான் சுந்தரேசன்.
“ சீச்சி அப்பிடியெல்லாம் ஒண்டுமில்லை. கேள்விப்பட்டால் அப்பர் கொலை செய்து போடுவர்” என்றான் கபிலன்.
அவர்கள் இப்படிக் கதைத்துக் கொண்டுவர படமாளிகை வந்துவிட்டது.

பிளாசாத் தியேட்டர் முதலாளி ஒரு தமிழர். தமிழ்ப் படங்கள் இந்தியாவிலை வெளியாகிற அதே தினத்திலை பிளாசாவிலும் வெளியாகும். கிழமை நாட்களிலை மூன்று காட்சிகள் நடைபெறும் . பகல் இரண்டரை மணிக் கொரு காட்சி ஆறரை மணிக்கொரு காட்சி பிறகு பத்தரை மணிக்கொரு காட்சி. சனி ஞாயிறு நாட்களிலை படமாளிகை நிரம்பி வழியும் நாலு காட்சிகளும் நிரம்பிய நிலையிலேயே நடக்கும். அதுவும் எம்.ஜி.ஆர் சிவாஜி படங்கள் என்றால் சொல்லத் தேவையில்லை. சனம் போட்டி போட்டுக் கொண்டு நிரம்பி வழியும். சில வேளை சண்டையளும் வரும். படமாளிகை முதலாளி இவற்றையெல்லாம் எதிர் பார்த்து சண்டையளை அடக்க ஆக்களையும் வைத்திருப்பார். அவர்களுக்கும் அடங்காவிட்டால் பொலிசைக் கூப்பிடுவார். இண்டைக்கு என்னவோ அவ்வளவாக சனம் இல்லை. வழக்கமாக வெள்ளிக்கிழமையும் சனமாகத்தான் இருக்கும். நிமிர்ந்து பார்த்தான். படத்தின் பெயர் பாசமலர் என்றிருந்தது. பழைய படம். அதுதான் சனமில்லையென்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலன் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.
இண்டைக்கு கபிலனின் உபயம் எண்டதாலை கபிலனே போய் ரிக்கற் வாங்கினான். முதலாம் வகுப்பில் போய் அமர்ந்து இருவரும் படம் பார்க்க ஆரம்பித்தார்கள்.

...................................

கபிலனும்சுந்தரேசனும்வசந்தியைக்கொண்டுவந்து விட்டுவிட்டுப் போனபின் உள்ளே வந்த வசந்தி தன்னுடைய அறைக்குள் சென்று உடுப்புகளை மாற்றிவிட்டு பாடசாலை வேலைகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

அப்போது அவளின் கதவு தட்டப்பட்டது. வசந்தி கதவைத் திறந்தபோது வீட்டுக்கார அன்ரி நின்றிருந்தா.
" என்ன அன்ரி இந்த நேரம் ஏதும் தேவையே?" என்று கேட்டாள் வசந்தி.
" ஒருக்கா வாரும் பிள்ளை 'இவர்' உங்களோடை ஏதோ கதைக்க வேணுமாம்" வசந்தி வெளியே வந்து முன் மண்டபத்திற்கு வந்தாள்.
" வசந்தி நான் சொல்லிறன் என்று குறை நினைக்கக் கூடாது. நீர் பொம்பிளைப் பிள்ளை அதுவும் ஆசிரியை கொஞ்சம் கவனமாக இருக்கவேணும். இன்றைய நிலைமை உங்களுக்குத் தெரியும். எப்பவும் வீட்டுக்கு எட்டு மணிக்குள்ளை வந்திட வேணும்." என்றார் அந்த வீட்டின் உரிமையாளர். இப்போதான் வசந்திக்கு விடயம் புரிந்தது. தான் கபிலன் சுந்தரேசனோடு வந்ததைப் பார்த்துவிட்டார்கள் என்பது.
" அங்கிள்.. என்னைக் கூட்டிக் கொண்டுவந்து விட்டவை என்னோடை யூனியிலை படிச்சவை. அதிலை ஒருவருக்கு இண்டைக்குத்தான் எங்கடை பள்ளியிலை வேலை கிடைச்சது. அதனாலை இரவுச் சாப்பாடு வாங்கித் தந்தவர். இனிமல் நேரத்துக்கு நான் வருவன்" என்று வசந்தி கூற
" எல்லாம் உன் பாதுகாப்புக்காகத்தான் அம்மா சரி நீ போய்ப்படு" என்று அவர் கூற வசந்தி தன் அறைக்குத் திரும்ப வந்துவிட்டாள். அறைக்கு வந்து படுத்தவள் பல விடயங்களைப் பற்றிச் சிந்தித்தாள். அவளையும் அறியாமல் கபிலன் மீது அவளுக்கு ஒரு விருப்பம் ஏற்படுவதை அவள் உளப் பூர்வமாக உணர்ந்தாள். ஆனால் அவனுக்கு அப்படியான உணர்வு இருப்பதாகத் தெரியவில்லையே என்று குழம்பினாள்.

இண்டைக்கு றோட்டிலை பார்த்த ஆசிரியை நாளைக்குப் பள்ளியிலை அதைப் பத்தாக்கிப் பரப்புவது நிச்சயம். அந்த ஆசிரியை வதந்திகள் பரப்புவதில் சரியான கெட்டிக்காரி. வதந்திகள் பரப்புவதால் மற்றவர்கள் மனம் புண்படுமே என்றெல்லாம் அவள் சிந்திப்பதில்லை. பதிலாக தான் பரப்பும் வதந்தியால் மற்றவர்கள் படும் துயரத்தை நன்றாக ரசிக்கும் தன்மை கொண்டவள். எதுக்கும் தயாராகவே பள்ளிக்குப் போகவேணும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள். அவளின் பிரச்சினை என்ன வென்றால் கபிலன் திங்கட்கிழமைதான் முதன்முதலாக பள்ளிக்கு வரப்போகிறான். வரும்போதே இப்படி ஒரு வதந்தியை எதிர்கொள்வது அவனது எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்பதே. தன்னால் கபிலன் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதை நினைத்துக் கொண்டே அவள் தூங்கி விட்டாள்.

**இன்னும் வரும்........**

# கல்யாணமாம் கல்யாணம்

**என். நஜ்முல் ஹுசைன்**

ஷீலாவின் மகள் கைஷலஜாவுக்கு தூக்கி வாரிப் போட்டது. அந்த சீடியை சிறிது பார்க்கும் போதே அவளுக்குத் தலை சுற்றி விட்டது. ஒரு முறை பார்த்தபோதே அது தனது தாய்தான் என்பதை இலகுவாக அடையாளம் கண்டு கொண்டாள். ஆனால் பக்கத்தில் அமர்ந்திருந்தது தனது தந்தையல்ல என்பதுதான் அவளை குழப்பமடைய செய்தது.

அம்மாவின் அறைக்குள் ஒரு பொருளைத் தேடிப் போன போது கிடைத்த சீடி. "ஷீலாவின் கல்யாணம்" என்றிருந்ததால் அம்மாவின் திருமண சீடி என்று ஆவலுடன் பார்த்தாள். அம்மாவின் திருமணம் நடக்கிறது. ஐயர் மந்திரம் ஓத வேறு யாரோ அம்மாவுக்கு தாலி கட்டுகிறார்.

அப்பா மீது கொள்ளை அன்பு வைத்திருந்த கைஷலஜாவால் "அப்பா, அம்மா உங்களை இரண்டாவதாகவா திருமணம் முடித்தார்?" என்று கேட்காமல் இருக்க முடியவில்லை. திருதிருவென விழித்த அப்பாவிடம் சிடீ பற்றி சொன்னதும் அவர் விழுந்து விழுந்து சிரித்தார்.

"அது அம்மா அந்தக் காலத்தில் நடித்த 'ஷீலாவின் கல்யாணம்' சீரியலில் வந்த காட்சி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு. குணறுபேஸ்

14 ஆம் பக்கத் தொடர்ச்சி

கொடியிலேயே இருந்தது. அவ்வவ்போது அது கீச் கீச் என்று அழுதது.

சிட்டுக்குருவி அடிபட்டதனால் வரவேற்பறையில் கிடந்த இரத்தத்தினை சுத்தம் செய்வதற்காக அம்மா சகுந்தலா நீர் ஊற்றி வரவேற்பறையை சுத்தம் செய்தார். கோபாலப் பிள்ளை வாத்தியாரினதும் மனைவி சகுந்தலாவினதும் சுதாகரனினதும் முகங்கள் வாடி வதங்கிவிட்டன. சிட்டுக் குருவி மின்விசிறியில் அடிபட்டு இறந்த நேரத்திலிருந்து ஒரு வாரமாக வீட்டில் ஒழுங்கான சமையலும் இல்லை. தேனீரும் இல்லை. சமைக்கவும், சாப்பிடவும், குடிக்கவும் மனமில்லாமல் அந்த வாரம் கடந்தது. சிட்டுக்குருவி இறந்து சிலமணி நேரத்தில் கலக்கத்துடன் இருந்த தாய் சகுந்தலாவிடம் சென்ற சுதாகரன்"அம்மா நான் ஒரு வெள்ளைக் கொடி போடட்டுமா?" என்று அழுதபடியே கேட்டதும் அதற்குத் தாய் சகுந்தலா " ஏதோ உன்ர விருப்பப்படி செய்" என்று சொன்னதும் சுதாகரனுக்கு மீண்டும் ஞாபகத்திற்கு வரவே ஒருவாறாகத் தன்னைத் தேற்றிக் கொண்டவன் இன்று ஏன் இந்த சிட்டுக்குருவிகளின் ஊடாட்டத்தைக் காணவில்லை என்று ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தவேளை அந்தி சாயும் மாலை நேரமுமானது. தாயார் தயார் செய்து எடுத்து வந்து கொடுத்த தேனீரைக் குடித்த அந்தக் கணத்தில் சோகமும் சோம்பலும் கலைந்து உற்சாகம் பிறக்கவே சற்று வெளியே சென்றுவரலாம் என ஆயத்தப்பட்டு புறப்பட்டுச் சென்றான்.

தன்னோடு படித்த சில நண்பர்களை அவன் சந்தித்து சிட்டுக்குருவிகள் பற்றி உரையாடியபோது அவர்கள் சில விடயங்களைப் பகிர்ந்து கொண்டனர். முப்பது வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தின்போது தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், கையெறி குண்டுச் சத்தங்களும், பீரங்கித் தாக்குதல்களும், எறிகணை வீச்சுக்களின் சத்தமும் சிட்டுக் குருவிகளின் வாழ்வினை ஒரு விசை சிதைத்து விட்டது. அவற்றோடு இன்றைய வீடுகளில் உள்ள குளிரூட் டப்பட்ட வீட்டு வசதிகள் சிட்டுக்குருவிகளின் வாழ்விற்குப் பொருத்தமானதல்ல. எனவே குளிரூட்டப்பட்ட வீட்டு வாழ்க்கை முறையை ஒரு காரணமாகச் சொன்னார்கள். வீடுகளில் பாவனையிலுள்ள மின்விசிறிகளும் சிட்டுக் குருவிகளின் உயிர்களுக்கு ஆபத்தை விளைவிப்பதாக இன்னுமொரு நண்பர் சொன்னார். சமகாலத்தில் பாவனையிலுள்ள செய்மதித் தொடர்பாடல் அலைவரி சையின் மூலமாகக் கிடைக்கின்ற தொலைக்காட்சி சேவைகளின் பாவனை காரணமாகவும், கையடக்கத்தொலைபேசி பட்டி தொட்டி எங்கும் எல்லோரிடமும் பாவனைக்கு வந்துள்ளதனால் மின்காந்த அலைகளின் பாவனை அதிகரித்துள்ளதென்றும் இந்த மின்காந்த அலைகள் காரணமாக சிட்டுக்குருவிகளினால் வானமண்டலங்களில் பறக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதனாலும் அது அழிவு நிலைக்கு வந்து விட்டதாக கருத்துக்கள் கூறினர். இவை இவ்வாறிருக்க நெல், தானியங்கள் என்று எல்லா வகையான உணவுப்பொருட்களிலும் கிருமிநாசினிகளின் பாவனை காரணமாகவும் செயற்கை உரமிடுதல் காரணமாகவும் உணவுப் பொருட்களில் கலந்துள்ள நச்சுத்தன்மையினால் தானியங்களும் நச்சுத்தன்மை உற்றது. இதனால் தானியங்களை உண்ணும் குருவிகள் இறப்பது ஒருபுறமிருக்க அவற்றின் இனப்பெருக்கவீதம் குறை வடைகின்றது என்றும் சில நண்பர்கள் கூறினர். இவை எல்லாவற்றையும் கடந்து தப்பிப்பிழைத்து சில சிட்டுக் குருவிகள் வாழ்ந்தாலும் உயிரினங்கள் மீது மனவிரக்கமற்ற சிலர் சிட்டுக்குருவிகளை சுருக்கு வைத்துத் தொகை தொகையாப் பிடித்து தீயில் சுட்டு உண்டு மகிழ்கின்ற கொடும்பாதகச் செயலும் மற்றொரு காரணம் என்றும் கூறினர்.

இவற்றையெல்லாம் கேட்ட சுதாகரன் மீண்டும் சிட்டுக்குருவிகளின் வாழ்விற்கு புத்துயிர் கொடுக்கும் வண்ணமாக அறிமுகமான கடைகளுக்குச் சென்று சிறிய அட்டைப்பெட்டிகளை எடுத்து வந்து சிட்டுக்குருவிகளுக்கான கூடுகளை அமைத்தெடுத்தான். அவற்றோடு சிட்டுக் குருவிகளுக்கு உணவு அளிப்பதற்காக தானியங்களுக்கென சிறிய மூன்று தட்டுக்களும் நீர் அருந்துவதற்கென சிறிய தட்டுமாக ஒன்றாகச் சேர்க்கப்பட்ட பெரிய தட்டுக்களையும் தனது பணத்தில் கொள்வனவு செய்து கொண்ட சுதாகரன் அவன் வாழும் கிராமத்தில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா ஒரு கூடு வீதம் கொடுத்து சிட்டுக்குருவிகளின் வாழ்விற்கு புத்துயிர் கொடுக்கும்படியான சில ஆலோசனைகளையும் கூறினான்.

பிரான்சிலிருந்து விடுமுறையில் வந்த சுதாகரனின் விடுமுறையும் முடிந்து விட்டது. மீண்டும் பிரான்சிற்குச் செல்வதற்காக அவன் தயாரானபோது தனது தாய் தந்தையரிடம் சிட்டுக்குவிகள் நமது வீட்டிற்கும் அயலிலுள்ளவர்களின் வீடுகளுக்கும் மீண்டும் வருவது பற்றி எனக்கு கட்டாயம் சொல்லுங்கள் என்று கூறி விடைபெற்றுச் சென்றான். இப்போது பிரான்ஸ் நோக்கி ஆகாய விமானத்தில் பறந்து கொண்டிக்கிறான். ஆனால் அவன் தயாரித்து விநியோகித்த சிட்டுக்குருவிக் கூடுகளைத் தேடி வீடுகளில் மனிதரோடு இணைந்து வாழ்வதற்கும் கீச் கீச் சத்தம் மீண்டும் வீடுகளில் ஒலிப்பதற்கும் சிட்டுக் குருவிகளின் குறும்புகளைப் பார்த்து இரசிப்பதற்கும் மனிதரோடு இணைந்து வாழ்வதற்கு சிட்டுக்குருவிகள் மீண்டும் ஆகாயத்தில் இறக்கை அடித்துப்பறந்து வருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ● து. மதனரூபி

# நிஜங்கள் பேசுகிறது

"கத்தி இன்றி இரத்தம் இன்றி யுத்தம் ஒன்று நடக்கின்றது" கவிஞர் நாமக்கல் இராமலிங்கபிள்ளை அவர்கள் எழுதிய இறவா வரம் பெற்ற வைரவரிகளை



சிந்தித்த சாந்த சொரூபியின் வீட்டுக்குள் நடைபெறும் யுத்தத்திற்கும் இவ்வரிகள் பொருந்தும் என ஏதோ சிந்தித்த வண்ணம் வேப்பமர நிழலில் இளைப் பாறினாள்.

சாந்த சொரூபியின் அப்பா சண்முகம் அன்பானவர் நேர்மையானவர். பண்பாக பழகும் இயல்புடையவர். அறிவுத்திறன் வாய்ந்தவர். தனது பிள்ளைகளைப் பற்றி எந்நேரமும் கற்பனை செய்து கொண்டே செயற்படும் சிறந்த உழைப்பாளி பரம்பரை பரம்பரையாக செய்யும் தொழிலைச் செய்து தனது குடும்பத்தை கௌரவமாக வாழ வைப்பவர். சண்முகத்தின் மனைவி செல்லம் தலை விக்கே உரித்தான பண்புகள் உள்ளவர். சண்முகத்தின் எண்ணம் அறிந்து செயற்படுபவர். பிள்ளைகள் மீது பாசத்தைப் பொழிவார். பிள்ளைகள் அறுவரைப் பெற்றவர். அதில் தவச்செல்வன், தங்கச்செல்வன், தமிழ்ச்செல்வன் என மூன்று ஆண் பிள்ளைகளைப் பெற்றார்கள். இல்லாவிடில் மூன்று பெண்ணைப் பெற்றவர் பரம ஏழையாவர் எனும் வாக்கியம் உண்மையாகிவிடும்.

சாந்தசொரூபியின் அப்பாவின் கடின உழைப்பு குடும்பம் கௌரவமாக வாழ போதுமானதாக இருந்தது. அதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்த சண்முகம் பெற்ற பயன் பிள்ளைகளைக் "கல்வி மான்களாக்கியது". கல்வி என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் சூழலில் பிள்ளைகளை கல்வி கற்க வைத்தது ஒரு அசாத்தியமான சாதனையாகும்.

சாந்தசொரூபியின் கல்விப் பயணமானது ஆரம்பத்தில் உயர்கல்விக்கு வித்திட்டது. யாரோ ஒரு புண்ணியவானின் அறிவுரைக்கேற்ப சாந்தசொரூபி தனது கணக்காளராகும் பட்டத்தை நிறைவேற்றுவதற்காக பலவற்றைக் கற்று தனது கணக்காளர் பட்டத்தை நிறைவேற்றினாள். சாந்தசொரூபி கணக்காளர் பட்டம் பெறுவதற்காகக் கல்லூரியில் கற்கும் வேளையில் தொண்டர் ஆசிரியராகவும் அரசசார்பற்ற நிறுவனமென்றில் உளவியல் தொண்டராகவும் சனி, ஞாயிறு தினங்களில் தனது பட்டப்படிப்பையும் தொடர்ந்தாள். பின் கணக்காளர் பட்டம் பெற்று பலரது பாராட்டுக்களையும் சிலரது பொறாமை வார்த்தைகளையும் கேட்டு மகிழ்ச்சியுடன் இருந்த போது......

பட்டம் பெற்று சரியாக பன்னிரண்டாம் நாள் ஆசிரிய உதவியாளராக நியமனம் பெற்று இன்று கணக்கியல் பட்டதாரியுடன் பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமாவும் முடித்து பிரபல பாடசாலை ஒன்றில் சிறப்புமிகு ஆசிரியராக மட்டுமன்றி ஓரளவு சமூகத்தில் பேசப்படக்கூடிய கவிஞர் கவிக்குயில் என்ற பெண் எழுத்தாளராகவும் மிளிர்ந்து கற்பித்துக் கொண்டிருக்கின்றாள்.

சாந்த சொரூபியின் தம்பி தவச்செல்வன் அவனுக்கு திறமையிருந்தும் அவனது கவனயீனத்தால் கையடக்கத் தொலைபேசியினால் பலவற்றை இழந்து தனியார் கல்வி நிலையங்கள் சிலவற்றில் கற்பிக்கின்றான்.

பிள்ளைகளின் உயர்ச்சி கண்டு பெற்றோர் உளம் மகிழ்ந்து சமுதாயத்தில் உயர்வர். மதிப்புக்குரியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையுடன் வாழும் நேரம் அவளுடைய தம்பி தவச்செல்வனின் வடிவில் சுனாமி வீசத் தொடங்கியது. தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கும் சக ஆசிரியை ஒருவருடன் ஏற்பட்ட நட்பு காதலாக மாறியதுடன் இன்று குடும்பத்தை சின்னா பின்னாமாக்கும் நிலைக்கு வந்துள்ளது. தவச்செல்வனின் காதலி இன்று குடும்பத்தின் சந்தோசத்தையும் நிம்மதியையும் கெடுக்கின்ற கொடுமை நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

அதே வேளை சாந்தசொரூபியை உயிருக்குயிராக பரிபூரணமாக சீதனம் எதுவுமின்றி விரும்பும் ஒருவனை அரச உத்தியோகம் இல்லாதவன் என்பதால் திட்டவட்டமாக மறுக்கும் அவனது தந்தை, எல்லோரையும் உசாதீனம் செய்து காதல் வசப்பட்டுள்ள அவளுடைய தம்பி தவச் செல்வனின் நிலை கண்டு துவண்டு போயுள்ளார் தாய் செல்லம். பிள்ளைப் பாசத்தால் உருகி உருகி வாழ்வு கொடுத்த கணவனுக்கும் பெற்றெடுத்த பிள்ளைக்குமிடையில் தினமும் போராடும் நிலையில் செல்லம் துவண்டுபோயுள்ளார்.

அவள் தம்பி தவச்செல்வனோ இவை எவையும் தன்னைப் பாதிக்காதவாறு தன் காதலைப் பெரிதாக எண்ணி அதனைப் போற்றி வளர்க்கின்ற கொடுமை.

மூத்த பிள்ளை சாந்தசொரூபி என அழகான பெயரைச் சூட்டினார்கள். அடுத்த ஆண் பிள்ளை "சாண் பிள்ளையானலும் ஆண் பிள்ளைக்கு ஏங்கும் சமூகமாச்சே அதனால் தான் சண்முகமும் செல்லமும் தன் மகனுக்கு தவச்செல்வன் என பெயரிட்டார்கள். தொடர்ந்து இரு பெண் பிள்ளைகள் வசந்தசொரூபி, சிவசொரூபி என அழைக்கப்பட்டார்கள். மற்றைய இரண்டு ஆண்பிள்ளைகளுக்கும் தங்கச்செல்வன், தமிழ்ச்செல்வன் எனப் பெயரிட்டார்கள்.

ஆறு குழந்தைகளும் சந்தோசமாகவே வளர்ந்தார்கள். செல்வந்த வீட்டுப் பிள்ளைகளுக்கு கிடைப்பதெல்லாம் கிடைக்காவிட்டாலும் அத்தியாவசிய மானவை எல்லாம் கிடைத்தன. வருஷம் தீபாவளிக்கு புது உடுப்புமுதல் இனிப்பு பண்டங்கள், விளையாட்டுப்பொருட்கள் வரை கிடைத்தன. வாழ்க்கையின் வசந்த காலம் இளமைக்காலம் என்பது அவர்களுக்கு உண்மையாக இருந்தது. நாட்கள் நகர்ந்தன. பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானார்கள்.

சாந்தசொரூபி அவளது தந்தை சண்முகத்தின் உழைப்பினாலும் சென்ற பாதை நேர்மையானதாலும் கணக்கியல் பட்டதாரியாகி ஆசிரியரானாள். அவள் தம்பி தவச்செல்வனோ கலைப்பட்டதாரிப்படிப்பை இடைநிறுத்திவிட்டு காதல் உலகை ஆண்டு கொண்டு கல்யாணமும் முடித்து தன் வாழ்க்கையை தானே கவனித்துக் கொள்ளும் நிலை.

தங்கச்செல்வன் சட்டக்கல்லூரி மாணவன். தங்கை வசந்த சொரூபி கலைப்பட்டதாரி ஆசிரியர். தம்பி தமிழ்ச்செல்வன் பல்கலைக்கழக மாணவனாக வலம் வரும் ஒரு படித்த குடும்பம்.

சண்முகத்தின் தீராத கவலை தீர்ந்து விட்ட பெருமை. பகீரத உழைப்பினால் கிடைத்த திருப்தி, கௌரவம், மதிப்பு, சண்முகத்தின் கனவு, கல்யாண சந்தையில் விலைபோக வேண்டிய பெண்பிள்ளைகள் தாய் செல்லத்தின் ஆரோக்கியம் இவை எல்லாம் தவிடு பொடியாகும் நிலை ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் காதல் நோயால் நிகழும் இழப்புகளை அவள் தம்பி தவச்செல்வன் உணரும் நிலையில் இல்லை எதிர்காலம் ஒளிமயமானதாகுமா? அல்லது இருண்டு விடுமா? சண்முகத்தின் உழைப்பிற்கு அவப் பெயர் ஏற்பட்டு விடுமா? தவச்செல்வனின் வாழ்வு கேள்விக்குறிகளாகி விடுமா? என இப்படியே பல விடை தெரியாத வினாக்கள் என்னுள் எல்லாம் இறைவன் கையில்..... எனச் சிந்தித்த சாந்தகுமாரியை தாயின் முனகல் ஒலி சுய நினைவிற்கு கொண்டு வந்தது.

## வாசிப்பில்.......

" இந்தக் காமம் மிகப் பொல்லாதது
அருவருக்கத்தக்கது. அக்கா! எனக்கு எவ்வளவு
வலி ஏற்பட்டது தெரியுமா? நான் செத்தே
போய்விடுவேன். எனக்குக் கல்யாணம் ஆகுமோ
ஆகாதோ என்று எனக்கே தெரியாது. ஆனால்
கல்யாணம் ஆனால் மகளே பிறக்கக் கூடாது"

**அர்த்தநாரீஸ்வரர் ஹிந்தி நாவல் .**
**மூலம் : விஷ்ணு பிரபாகர்**
**தமிழில் : சுந்தரம்**
**சாகித்திய அக்கெடமி வெளியீடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆர்த்திகா சுவேந்திரன்

# ஆழ்மனக் குமுறல்

அதுவொரு இனிமையான மாலைப் பொழுது. நாள் முழுவதும் இருந்த வகுப்புக்களை முடித்துவிட்டு வீடு திரும்புவதற்காக களை ஒரு பக்கம் பசி ஒரு பக்கம் என ஒருவாறு பல தூரம் நடந்து பேருந்தினுள் சென்று நிம்மதிப் பெருமூச்சு விட்டவாறு அமர்ந்து கொண்டாள் வாணி. தினமும் பழக்கப்பட்ட ஒன்றே அந்தப் பேருந்துப் பயணம். எவ்வளவு களை எவ்வளவு வேதனை என்பன இருந்தாலும் பேருந்தின் ஜன்னலோரம் வழியாக வானம் பார்த்தபடி பயணிப்பதில் உள்ள சுகம் வேறு எங்கும் கிடைக்க வாய்ப்பில்லை. ஆனாலும் அந்த ஜன்னலோரம் கிடைப்பது என்பது கரடி பிறை கண்டாற் போலத் தானே. முயன்றால் எதுவும் முடியும் என்பது வாணியின் முழு நம்பிக்கை.

அது அவள் உயர்தரம் படித்துக் கொண்டிருந்த காலகட்டம். அந்த நேரம் அவளும் அவளது நண்பர்களும் நிற்க இருக்க நேரம் இல்லாது ஓடித் திரிந்த காலகட்டம். அதிகாலையில் வகுப்பில் பரீட்சை அதைச் செய்துவிட்டுக் காலையில் பள்ளிக்கூடம் அது முடிந்ததும் யாழ்ப்பாணத்தில் ஒரு வகுப்பு, அது முடிந்ததும் ஊரில் ஒரு வகுப்பு இவ்வாறு காலை ஐந்து மணிக்கு ஆரம்பிக்கும் பயணம் கிட்டத்தட்ட எட்டு எட்டரைக்கு நிறைவுக்கு வரும். அதன் பின்னர் கூடத் தனியாக வகுப்பு போட்டுக் கற்கும் மாணவர்களும் அவள் வகுப்பில் இருக்கவே செய்தனர். அது மாணவர்களின் அறியாமையா? பெற்றோரின் அறியாமையா? என்பது அவள் அறிவுக்கு எட்டாத ஒன்றாகவே இருந்தது. அந்த வகுப்புக் கலாச்சாரத்தை எண்ணும் போது அவளுக்கு சிரிப்பு வருவது தான் அதிகம். அவளைப் பொறுத்தவரையில் சரியான கற்றல் முறை என்பது பாடத்தை விளங்கிக் கொள்ள ஆசிரியரிடம் கற்க வேண்டும் அதைக் கொண்டு தானாகப் பயிற்சி சந்தேகங்களை உடனுக்கு உடன் தீர்க்க வேண்டும். இதை நோக்கித் தான் அவள் ஓடிக் கொண்டிருந்தாள்.

ஆனால், அவளது நண்பர்களோ வேறுவிதமாக ஓடிக் கொண்டிருந்தனர். அடுத்த வகுப்பிற்கு நேரம் ஆகிவிட்டது தாமதமாகிவிடும் என்று கல்வியகத்திற்கு அருகில் இருந்த சந்திக்கு ஓடிச் சென்று முதல் பேருந்தில் ஏறி அவர்கள் அந்த நெரிசலில் உயிரை வெறுத்துச் சென்று கொண்டிருந்தனர். காலை ஐந்து மணிப் பேருந்தில் வீட்டிலிருந்து புறப்பட்டு ஓடித் திரிந்து களைத்து இனி வீடு திரும்பும் போதும் அவ்வளவு நெரிசலில் வெந்து வேதனைப்பட்டு செல்ல அவள் மனம் தயாராக இல்லை. இதனால் நண்பர்களிடம் விடைபெற்று மத்திய பேருந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்திற்கு சிறிது தூரம் நடந்து சென்று அப்போது தான் அடுத்தாகப் புறப்படுவதற்காக தரிப்பிடத்தில் வந்து நின்ற பேருந்தில் ஏறி ஜன்னலோர இருக்கையில் முழு ஜன்னலையும் திறந்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டவாறு இருந்தாள். இவ்வாறு வந்து அமர்ந்தவள் முகத்தில் வியர்வைத்துளிகள் சூரியனின் மாலைக் கதிர்கள் பட்டு மின்னிக் கொண்டிருக்க பேருந்து புறப்படுவதற்கு நேரம் இருந்ததால் மெதுவாக வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பேருந்தின் ஜன்னலூடாக வெளியுலகைப் பார்ப்பதில் கொள்ளைப் பிரியம் வாணிக்கு. சிறிது நேரத்தின் பின் கையில் ஒரு தட்டுடனும், அழுக்கான பல கிழிசல்களுடனான சேலையுடனும் மறுகையில் ஒரு குழந்தையுடனும் பேருந்தில் ஒரு பெண் ஏறினாள். " அம்மா.... குழந்தைக்குப் பசி ஏதாவது கொடுங்க... " என்றவாறு தட்டை நீட்டிய வண்ணம் பேருந்தில் ஒவ்வொருவரிடமும் கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

இவ்வாறு ஒவ்வொரு நாள் பயணத்திலும் மத்திய தரிப்பிடத்தில் புறப்படத் தயாராக நிற்கும் பேருந்தில் யாராவது ஒருவராவது ஏறுவது வழக்கம். ஒற்றைக் கை இல்லாமல், ஒரு கால் இல்லாமல், போரில் பாதிக்கப்பட்டதாகக் கூறி, மனைவிக்கு, மகளுக்கு சத்திர சிகிச்சைக்கு பணம் சேகரிப்பதாகக் கூறி, கண்ணீர்விட்டுக் கூட பண உதவி செய்யுமாறு கேட்பார்கள். அவ்வாறு வருபவர்கள் பலரில் சாராய வாடை அடிக்கும். அது சாராய வாடை அது தான் என்பதையும் நண்பர்கள் மூலம் வாணி அறிந்து வைத்திருந்தாள். தினமும் பேருந்துப் பயணத்திற்குப் பழக்கப்பட்டவர்கள் அதைக் கண்டும் காணாமல் இருப்பதற்கும் பழக்கப்பட்டிருந்தார்கள்.

உலகில் எந்த நிலை ஏற்பட்டாலும் ஒரு மனிதனுக்கு தனது தன்மானத்தைத் துறந்து சக மனிதரிடம் இறைஞ்சும் நிலை வந்துவிடக்கூடாது. அதைப் போல ஒரு வேதனையான விடயம் வேறு எதுவும் இல்லை என்பது அத்தனை வருட பேருந்து பயணத்தில் வாணி கற்றுக் கொண்ட விடயம். '

ஏதோ ஒரு காரணத்திற்காக வேறு வழி இன்றி இறைஞ்சும் நிலை வருவது கொடுமை. அதிலும் மரம் போல் நிற்பவர்கள் முன்னாலும் முகத்தைச் சுழிப்பவர்கள் முன்னாலும் இறைஞ்சுவது எவ்வளவு பெரிய கொடுமை. ஏதாவது ஒன்றை சாதாரணமாக நம்மவர்களிடம் கேட்கும் போது அவர்கள் பதிலளிக்காமல் இருந்தாலே எவ்வளவு கோபம் வரும் நமக்கு. ஆனால் இவர்களின் நிலை!' இவ்வாறு அவர்களைப் பார்க்கும் போது வாணியின் மனம் பரிதாபப்படும். இதை மாற்றுவதற்கு ஒருவர் மனதில் கூட சிந்தனை உதிக்கவில்லையா? ஒருவர் கூட சிறு முயற்சியும் செய்யவில்லையா? என்று நினைக்கும் போது வாணிக்குத் தான் வாழும் சமூகத்தின் மேலேயே ஒரு வெறுப்பு வரும்.

தாய் தந்தையரைப் பற்றிக் கொண்டு ஒரு ஒட்டுண்ணியாக வாழும் என்னால் இதற்கு என்ன செய்துவிட முடியும் என்று எண்ணும் போது கண்கள் பனித்துவிடுவதை அவளால் தடுக்க முடிவதில்லை. தான் கற்கும் கல்வியைக் கொண்டு எதிர்காலத்தில் இந்த நிலையை முற்றாக ஒழித்துவிட வேண்டும் என்பது அவளது குறுங்கால இலட்சியமாக இருந்தது. அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல்களைக் கொடுத்து, தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களையும் சாதாரண மனிதர்களாக, அவர்களுக்குள் இருக்கும் திறமைகளை வெளிக் கொண்டு வந்து சாதனை மனிதர்களாக மாற்ற வேண்டும் என்ற பேரவாவும் அவளுக்குள் இருந்தது. தன் பிரதேசத்தில் மட்டுமல்ல இவ்வாறானவர்கள் இருக்கும் எல்லாப் பிரதேசத்திலும் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்று அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் வாணியின் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

அன்று பேருந்தில் ஏறிய அந்தப் பெண்ணின் தட்டில் சிலர் கொஞ்சக் காசு போட்டார்கள். பலர் கண்டும் காணாதது போல இருந்தார்கள். வாணிக்கு உள்ளே வேதனை உறுத்தினாலும் என்ன செய்வது என்று தெரியவில்லை. மனதுக்குள் மிகவும் வலித்தது. இந்தக் கோலத்தில் வாழ்வதே மிகக் கொடுமை என்றிருக்கையில் குழந்தைக்கு வேறு பசி என்று சொல்கிறாளே யார் மனம் தான் இளகாது. யார் மனம் தான் வலிக்காது. ஆனாலும் வாணியிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லை. 'சீ ஒரு பிஸ்கட் ஆவது வைத்திருந்திருக்கலாம் பையில்" என்று வாணிக்குத் தோன்றியது. அவளே அகோரப் பசியில் இருக்கையில் ஒன்றும் செய்ய முடியாதவளாய் ஊமையாய் கல் மனமாய் பேசாமல் இருந்தாள். அந்தப் பெண் இவள் முன்னால் வந்து தட்டை நீட்டிச் சில கணம் தாமதித்து விட்டு சென்றுவிட்டாள்.

தான் எதுவும் கொடுக்காமல் பேசாமல் கல்லாக இருக்க அந்தப் பெண்ணின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்று சிந்திக்க வாணிக்கு இது என்னடா வாழ்க்கை என்று வெறுப்பாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி சிந்தித்தவளுக்கு பின் இருக்கையில் இருந்த ஒரு அம்மாவின் குரல் கேட்க சற்று உன்னிப்பாக அவர் என்ன சொல்கிறார் என்பதை அவதானித்தாள். " இது என்ன இந்தக் காலம் மாறிப் போச்சு. மனித மனமே இல்லாத சந்ததி வளர்ந்து கொண்டிருக்கு. ஒரு பெண் குழந்தைக்குப் பசி என்று கேட்கிறாள். ஒரு ஐஞ்சு ரூபா கூட குடுக்க முடியலயா? சீ மனமே நலமில்லாத சமூகமா உருவாகிக்கிட்டு இருக்கு.... சுயநல பிராணியா மனுஷன் மாறிட்டு இருக்கிறான்" என்று புலம்பிக் கொண்டிருந்தார். இதைக் கேட்க வாணியின் மனம் மேலும் கனத்து வெடிப்பதைப் போல இருந்தது.

கனத்த மனதுடன் அந்த ஜன்னலோரக் காட்சி கனத்த மனதிற்கு மருந்திடாதா என்ற ஏக்கத்துடன் சற்று வெளி நோக்கித் தன் பார்வையைச் செலுத்தினாள் வாணி. வெளியில் பார்க்கும் போது அவர்கள் கண்களில் அந்தக் கடை தட்டுப்பட சற்றும் எதிர்பார்க்காதவளாய் அதிர்ந்து போனாள். ஆம் அந்த மதுபானக் கடையில் சற்று முன் பேருந்தில் தட்டுடன் ஏறிய பெண்மணி காசைக் கொடுத்து ஒரு சிறிய சாராயப் போத்தல் வாங்கிக் கொண்டிருந்தாள். அதைக் கண்டதும் வாணிக்கு என்ன செய்வது என்ன சொல்வது என்றே தெரியவில்லை. நாம் எங்கு வாழ்கிறோம். நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்று சிந்திக்கச் சிந்திக்க வாணிக்கு ஏதோ செய்தது. மயக்கம் வருவதைப் போல இருந்தது. ஓ! என்று குழறி அழ வேண்டும் போல இருந்தது. ஒரு பெண்ணா? அதுவும் கையில் குழந்தையுடன் இருக்கும் பெண்ணா? அது அவள் தானா? வாணியின் இதயம் வெடித்து விம்மியது.

பின் இருக்கையில் இருந்த அம்மாக்கு அந்த நிகழ்வைக் காட்டி "யார்ட்ட மனம் இப்ப நலமா இருக்கு? எது மனுஷதனம்? எது சுயநலம்? இப்ப புரியுதா? கஷ்டப்பட்டு உழைச்சு நோகாம இருந்து சாராயம் குடிச்சு வாழ்க்கைய அழிக்கிறவைட்ட காசு குடுக்கச் சொல்லுறியளோ?" என்று கேட்டுக் கொண்டிருந்தார் ஒருவர். வாணி மெதுவாகத் திரும்பி இருக்கை இடுக்கால் முதலில் கதைத்த அந்த அம் மாவின் முகத்தைப் பார்த்தாள். அந்த முகமும் அந்த நிகழ்வை ஜீரணிக்க முடியாமல் திடுக்கிட்டு திகைத்து அதிர்வின் உச்சக் கட்டத்தில் இருந்தது.

ஏன் அந்தப் பெண் அந்த மதுப் போத்தலை வாங்கி இருப்பாள்? அவள் போதைக்கு அடிமையானவளா இருப்பாளோ? இல்லைப் போதைக்கு அடிமையாக்கப் பட்டவளா இருப்பாளோ? அவளுக்கா அது? இல்லை வேறு ஆரும் வெருட்டி அவளை வாங்கச் சொல்லி இருப்பினமோ? அவளின்ட நிலை ஏன் இப்பிடியா போனது? இங்க என்ன நடக்குது? எது உண்மை? எது மாயை? இப்ப தெரிறது உண்மையா? இல்லை இதுக்கு உள்ளுக்குள்ள வேற ஏதும் இருக்குதோ? ஏன் ஆரும் இதைக் கவனிக்க மாட்டினமோ? ஆரும் உண்மையைக் கண்டுபிடிக்க எத்தனிக்கமாட்டினமோ? சமூக ஆர்வலர்கள் கண்களுக்கு இவை தெரியலயோ? அல்லது கண்டும் காணாத மாதிரி இருக்கினமோ? ஒருவேளை இப்ப தான் ஆராஞ்சு கொண் டிருக்கினமோ? இல்லை இது ஒண்டும் செய்ய ஏலா எண்டு கையவிட்டுட்டினமோ? பேசாம நானே போய் உண்மைய கண்டுபிடிச்சா என்ன? இறங்கி பின் தொடர்ந்து போகட்டோ? சரி கண்டுபிடிச்சு என்ன செய்ய முடியும் என்னால? அவங்கள காப்பாத்த ஏலுமோ?' என்று தன்னைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தது வாணியின் மனம்.

"இந்தளவப் பாத்தா பிறகும் இன்னும் இப்பிடி ஜடம் மாதிரி உட்கார்ந்து இருக்கிறியே ஒன்றும் செய்ய ஏலாம இதைப் பாத்து செத்துவிட்ட என்னை நீ எப்பிடி உயிர்ப்பிக்கப் போறாய்?' என்று வாணியின் மனம் வாணியைக் கேட்டுக் கொண்டிருந்தது.

"ஒரு சாதாரண பெண்ணா இதைப் பாத்தும் ஒண்டும் செய்யேலாம இருக்கிற நான் எப்பிடி என்ட மனச உயிர்ப்பிக்கப் போறன்?" என்று சிந்தித்த வாணி தன் கைகளில் இருந்த புத்தகத்தைத் தடவி , 'நாளை மாறும். நாளை என் கனவுகள் மனித்தைக் காக்கப் போராடும். மனிதம் மீண்டு எல்லாம் சீராகும். ' என்று எண்ணி இறுக்கக் கட்டிக் கொண்டாள் புத்தகங்களை. கொடுமைகளைக் களைந்து எறிவதற்கு கல்வி தான் இதுவரை அவள் அறிந்த ஒரே ஆயுதம். ஆனால், இது அவள் தற்காலிகமாக அவள் தனக்குத் தானே தன்னைத் தேற்றுவதற்காக கூறும் பதிலா? இன்று மாற்ற முடியாதது நாளை மாறுமா? என்ற கேள்விகள் அவள் ஆழ்மனதில் இருந்து அரித்தபடிதான் இருந்தது.

## எழுத்தாளர் கவனத்திற்கு

**சிறுகதைபற்றிய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பசறையூர்" ஏ.எஸ். பாலச்சந்திரன்

# அமாவாசைக்குள் ஒரு நிலவு

**மா**லைப்பொழுதை மங்கிய இருள் கௌவிக் கொண்டிருந்தது. நேரம் இரவு பத்து மணியாகிவிட்டிருந்தது. ஊரே உறங்கி விட்டிருந்த போதும் அவள் மட்டும் இன்னும் விழித்துக் கொண்டிருந்தாள். காலையில் வீட்டை விட்டுப்போன தன் கணவன் இன்னும் வீடு வந்து சேரவில்லை. இத்தனை மணியாகியும் கணவனைக் காணவில்லையே என்ற ஏக்கமும் இன்றைய அவனின் தோற்றமும் செயற்பாடுகளும் எப்படி அமையப் போகின்றனவோ என்ற பயமும் அவளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. தன்னையும் மீறிக் கண்கள் மூட ஷோபாவில் அமர்ந்தவாறு உறங்கிப்போனவள். கதவு படபடவென தட்டும் ஓசை கேட்டுத் திடுக்கிட்டு விழித்தவள் சாராய வாடை காற்றோடு கலந்து வருவது கண்டு தன் கணவன் தான் என்று யூகித்துக்கொண்டு இதயம் படபடக்க ஓடிப்போய் கதவைத்திறந்தாள். வழமைபோல் அவன் அலங்கோலமாய் தள்ளாடியபடி உள்ளே நுழைந்தான். "என்னடீ... தூங்கிட்டியா? தூங்கி மூஞ்சி... சாப்பாட போடடீ" என்று சொல்லிக்கொண்டே சாப்பாட்டு மேசையில் தடுமாறி அமர்ந்தான். அவள் புலியிடம் அகப்பட்ட புள்ளிமானாய் செயற்பட்டாள். "என்னடீ செஞ்சி... இருக்கிற... சாப்பாடா இது... நீயே தலையில் கொட்டிக்க" என்று அவனுக்காக போடப்பட்டிருந்த சாப்பாட்டை அப்படியே அவள் தலையில் கொட்டினான். அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கண்ணீர் கண்களில் பீறிட்டு வந்தது.



**அ**வன் போய் படுத்துக்கொண்டான். அதுவரை சாப்பிடாமல் அவனுக்காகப் பசியுடன் காத்திருந்தவளுக்கு இப்போது பசியெல்லாம் எங்கோ பறந்துவிட்டது. அப்படியே மேசையில் மூடிவைத்தாள். அங்குள்ள சாய்வு நாற்காலியில் அப்படியே சாய்ந்தவாறு விம்மி விம்மி அழுதாள்.

**இ**ப்போது அவளுக்கு அவளுடைய கடந்தகால வாழ்க்கை நிழற்படமாய் தெரிந்தது. அப்போது அவள் பள்ளி மாணவியாய் இருந்தாள். அன்று அவள் அக்காவை பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வந்திருந்தார்கள். அம்மா மற்றும் உறவினர்களுடன் மாப்பிள்ளையின் தம்பியும் வந்திருந்தான். மாப்பிள்ளையின் அம்மா கதைத்துக் கொண்டிருந்தாள்.

"**இ**வன் என்னோட ரெண்டாவது புள்ள இவனை பார்த்தா பெரிய மகனை பார்க்க வேண்டியதில்ல. ..தம்பீ நீ பார்த்தா சரிடா என்று சொல்லிட்டான். அவன் தான் இவனையும் அனுப்பி வச்சான். ஏன்னா எங்க மேல அவனுக்கு அவ்வளவு நம்பிக்கை இல்ல. வயது போன கட்டை போனா வீடு வாசல தான் பார்த்துட்டு வருவாங்க சொன்னா சரியா பார்க்க மாட்டாங்கன்னு இவங்கிட்ட சொல்லியே அனுப்பிச்சிருக்கான்" என்றாள்.

**இ**தைக்கேட்ட சசி... சசி என்பது தான் அவள் பெயர்... கதவோரமாக மறைந்து கொண்டு மாப்பிள்ளையின் தம்பியைக் கவனித்தாள். அப்படியே ஒரு வினாடி அசந்தே போய் விட்டாள். அவன் கட்டழகுத்தோற்றம் அவளை என்னவோ பண்ணியது. அவனும் இவளைக்கண்டு விட்டான். அவள் எதிர்பார்த்திராத வகையில் அவன் எழும்பி உள்ளே வந்தான். " நீங்க பொண்ணுக்கு தங்கச்சியா... படிக்கிறீங்களா? என்றான். அவள் நாணத்தோடு தலை அசைத்தாள். " நான் மாப்பிள்ளையோட தம்பி தெரியும் தானே. பெயர் கண்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசன் "கண்ணா" என்றுதான் எல்லோரும் கூப்பிடுவாங்க. நான் நெனச்சா இந்த கல்யாணம் நடக்கும் தெரியுமில்ல" என்றான் கம்பீரமாக அவளுக்கு சிரிப்பு வந்தது. " எங்க அக்காவ உங்களுக்கு புடிச்சிருக்கு இல்ல" என்றாள். " உங்க அக்காவ விட உன்னதான் எனக்கு புடிச்சிருக்கு" என்றான் வெளிப்படையாக. அவள் தரையை நோக்கிக் கொண்டே "புடிச்சிருக்கு" என்றாள். " அப்ப சரி உங்க அக்கா கல்யாணம் நிச்சயமா நடக்கும்" என்றான்.

அவளுக்கு நம்பவே முடியாமல் இருந்தது. அவன் மீண்டும் போய் அம்மாவுடன் அமர்ந்து கொண்டான். அம்மாவும் மகனும் காதோடு காதாக கதைத்துக் கொண்டார்கள். பின் புன்முறுவலுடன் மாமியார் கதைக்க ஆரம்பித்தாள் "தம்பிக்கு பொண்ணை பிடிச்சிருக்காம் அப்போ கட்டாயம் அண்ணனுக்கும் புடிக்கும். இனி என்ன கல்யாணத்துக்கு தேதி குறிச்சிட வேண்டியது தான். அவர்கள் போய் விட்டார்கள். அப்பா அக்காவை கட்டித் தழுவினார். அம்மா கைகளால் தடவி திருஷ்டி முறித்தாள். சசி அக்காவை அப்படியே அணைத்துக்கொண்டாள்.

அக்காவின் திருமணமும் தடல்புடலாக நடந்து முடிந்தது. திருமணத்தன்று கண்ணா சசியிடம் "சசி இந்த கல்யாணத்தை இவ்வளவு சீக்கிரமா நடக்க வைத்ததே நான் தான். ஏன் தெரியுமா?" என்று கேட்டான். அவள் "எதுக்கென்றாலும் நான் உங்களுக்கு நன்றி கூற கடமைப் பட்டிருக்கேன்" என்றாள். "வெறும் நன்றி மட்டும் தானா?" என்று தமாசாக கூறினான். அவளுக்கு அவன் போக்கே புரியாமல் இருந்தது.

அக்காவும் புகுந்த வீட்டுக்குப் போய் விட்டாள். அவள் அப்பா அம்மாவுக்கு பெரும் சந்தோசமாக இருந்தது. நினைத்த மாத்திரத்தில் கல்யாணமே முடிந்து விட்டதே... எல்லாம் அந்த தம்பி கண்ணாவால் தான் என்று அவனை பெருமையாக எண்ணினார்கள்.

அப்போதெல்லாம் கண்ணா அடிக்கடி சசி வீட்டுக்கு வந்து போனான். அவர்களும் அவனை நன்கு கவனித்தே அனுப்புவார்கள். இவ்வாறு நாளடவில் கண்ணா சசி மேல் அளவில்லா அன்பு வைக்கத்தொடங்கினான். அவளுக்கு படிப்பு செலவுக்கு உதவுவது அவளின் பலவிதமான தேவைகளுக்கும் பணம் கொடுப்பது என்று செய்து வந்தான். இனி சசிக்கு அவனும் அத்தான் தானே அது தான் அவள் மீது அன்பு வைத்துள்ளான் என்று சசியின் பெற்றோர் நினைத்திருந்தார்கள். சசி கூட அப்படித்தான் எண்ணி இருந்தாள். ஆனால் அவளை அவன் காதலிப்பது அவனுக்கு மட்டுமே தெரியும். இப்போதெல்லாம் கண்ணா முற்றிலும் மாறிப் போயிருந்தான். கடுமையாக உழைத்தான். நிறைய சம்பாதித்தான். சசிக்கு எவற்றுக்கெல்லாம் பணம் தேவைப் படுமோ அவற்றுக்கெல்லாம் அவனே செலவு செய்தான். அவள் வேண்டாமென்று மறுத்தாலும் கட்டாயப்படுத்தி பணம் கொடுப்பான். அது மட்டுமல்லாமல் அவளுக்கு தெரியாமல் விதவிதமான வகைகளில் நகையணிகளும் செய்து வைத்திருந்தான். அவள் பெயரில் வங்கியில் பணமும் வைப்பு செய்திருந்தான். அவளது பிறந்தநாள் கொண்டாட முழு சிலவுமே இவனுடையதாகத் தான் இருக்கும். பண்டிகை நாட்கள் எப்போது வருமென்று எதிர்பார்த்து இருப்பான். அதற்கு முன்கூட்டியே சசிக்கு பொருத்தமான டிசைனில் உடைகள் வாங்கி விடுவான். இவ்வாறு அவளின்றி அவனில்லை என்ற அளவுக்கு அவன் மாறிப்போய் இருந்தான். தனது நண்பர்களிடமெல்லாம் எந்நேரமும் பெரிதாக கூறிக்கொண்டு இருப்பான். ஆனால் இத்தனைக்கும் சசியிடம் தனது எண்ணத்தை வெளிப்படுத்தவில்லை. தனது செய்கையால் அவள் புரிந்து கொண்டிருப்பாள் என்று எண்ணியிருந்தான்.

இவ்வாறு தீபாவளி பண்டிகையும் வந்தது. அவளுக்கென விஷேடமாக வாங்கிய புதிய டிசைன் உடைகளுடன் அவள் வீட்டுக்கு போய் இருந்தான். அவன் போன நேரம் சசி வீட்டில் இருக்கவில்லை. பக்கத்து வீடொன்றுக்கு போயிருப்பதாக அவள் அப்பா சொன்னார். அவளுக்கு வாழ்த்து கூற துடித்துக் கொண்டிருந்தான். அவளுக்காக வாங்கிய உடைகள் அடங்கிய பார்சலை வைப்பதற்காக அவளுடைய அறைக்குள் நுழைந்தான். அங்கே ஷோபாவில் அவளுக்காக வந்திருந்த பல வாழ்த்து மடல்கள் விதவிதமாக காட்சி அளித்தன. அவற்றை ஒவ்வொன்றாக பார்த்துக் கொண்டிருந்தவன் வித்தியாசமான காட்சியொன்றை பிரதிபலித்த வாழ்த்தொன்றும் இருக்கக்கண்டு அதிர்ச்சியுடன் அதை அனுப்பியது எவராக இருக்கும் என்று எண்ணியவாறு வாழ்த்தை விரித்தபோது உள்ளே "என் உயிரிலும் மேலான சசிக்கு எனது தீபாவளி வாழ்த்துக்கள் இவன் உன் மோகன்" என்று இருந்தது. அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவன் நெஞ்சு வெடித்து விடும்போல் இருந்தது. அந்த வாழ்த்தட்டையை சுக்குநூறாக கிழிக்க எண்ணி கை வைத்த போது சசி புன்முறுவலுடன் "ஹெப்பீ தீபாவளி" என்றவாறு உள்ளே நுழைந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் முகபாவனையை பார்த்து ஒரு கணம் திகைத்து நின்றாள். "ஏன் ஒரு மாதரியாக இருக்கீங்க... ஏதும் உடம்புக்கு" என்று அவள் முடிக்கும் முன் சசி இனியும் என்னை ஏமாத்த நினைக்காத ...ப்ளீஸ்... உண்மையைச் சொல்லிடு என்றான். " உங்கள நா ஏமாத்த நினைக்கிறேனா... இது என்ன புதுக்கதை?" என்றாள். "இது என்ன?" அவளிடம் வாழ்த்தட்டையை காண்பித்தான். "ஓ.... இதுவா... அப்படி இதுல என்ன நடந்திருச்சு என் நெருங்கிய சினேகிதர் ஒருத்தர் அனுப்பி இருக்கிறார்" என்றாள் சாதாரணமாக "வெறும் சினேகிதன் மட்டுந்தானா" என்றான் பதற்றத்தோடு. "காதலன் என்றே வைத்துக்கொள்ளுங்களேன்" என்றாள் சாவகாசமாக "ஓமை கோர்ட்" அவன் அங்குள்ள ஷோபா மீது தன்பலம் கொண்ட மட்டும் கையால் ஓங்கி அறைந்தான். சசியும் திடுக்கிட்டு விட்டாள்.

"அப்போ என்னைய நீ காதலிச்சது விளையாட்டா?"

"நா உங்கள காதலிச்சேனா.... எப்போதிருந்து? அதுக்கு ஆதாரமாக என்ன இருக்கு? இவ்வளவு நாளும் உங்கள நான் அத்தான் என்ற உறவு முறையாமட்டுந்தான் நினைச்சி ருக்கிறேன்" என்றாள் சசி. அதற்கு மேலும் அங்கு நிற்காதவளாய் மற்றைய அறைக்குள் மறைந்து விட்டாள். அவனுக்கு உலகமே இருளடைந்து விட்டது போல் இருந்தது. தலை கனத்து மயக்கம் வந்தது. கண்கள் குளமாகி விழிகள் மருண்டன. அவனால் அந்த அதிரிச்சியை தாங்கிக்கொள்ள முடியவில்லை.

நீண்ட நேரத்தின் பின் அவன் சுய நினைவுக்கு மீண்டும் உடம்பு சோர்வாக இருந்தது. சிரமப்பட்டு எழுந்தான். மெதுவாக நடந்து சசியின் அறைக்குள் நுழைந்தான். அவள் கட்டிலில் சாய்ந்தவாறு புத்தகமொன்றை பார்த்துக்கொண்டிருந்தாள்.

"சசி... என்ன மன்னிச்சிடு உன்ன சரியா புரிஞ்சிக்காம நான் தப்பா எடை போட்டுட்டேன். என் காதலுக்கு தடையா இருப்பேன் என்று நினைச்சிடாத உனக்கு முழு ஒத்துழைப்பும் தர தயாரா இருக்கேன். அவன் அப்படிச்சொன்ன போது சசி ஆச்சிரியமடைந்தாள். நான் உங்கள மன்னிக்கிறத விட நீங்கதா என்னை மன்னிக்கனும் நான் தான் உங்க மனச புரிஞ்சிக்காம இருந்திட்டேன். என்னை மன்னிப்பீங்களா? என்று அவன் காலைப்பிடித்தான்.

"இல்ல சசி... நடந்ததெல்லாத்தையும் ரெண்டு பேருமே மறந்திடுவோம். நீ நல்லா வாழ வேணுமென்று தான் நான் ஆசைப்படுகிறேன். உன் காதலனை நீ கணவனா அடைய அத்தனை அலுவல்களையும் நானே பொறுப்பேத்துக்கிறேன். இன்னைக்கே உங்க அப்பா அம்மாவோட இதை பத்தி கதைக்கிறேன்" என்றான். சில மணி நேரத்தின் பின் சாப்பாடு வேளையில் எல்லோரும் ஒன்றாக கூடினார்கள். மெதுவாக கண்ணா சசியின் விடயத்தை விபரித்தான். சசியின் பெற்றோர் இதற்கு ஒப்புக்கொள்ள வில்லை. அவன் அவர்களை மன்றாடி சம்மதிக்க வைத்தான்.

சில நாட்களில் சசியின் கல்யாணமும் நடந்து அனைத்து அலுவல்களுக்கும் கண்ணாவே தலைமை தாங்கினான். சசி மோகனுடன் புகுந்த வீடு போன பிறகே தன் வீட்டுக்கு திரும்பினான்.

நாட்கள் நகர்ந்தன சசி மோகனுடன் மகிழ்ச்சியாக குடும்பம் நடத்தினாள். கண்ணாவும் அடிக்கடி அவளைப் போய் பார்த்தான். ஆரம்பத்தில் ஒருவித மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த மோகன் நாளடைவில் கண்ணா மீது வெறுப்பு காட்டினான். அதற்கும் காரணம் இருந்தது. சசி மேல பொறாமைப்பட்ட சிலர் கண்ணாவையும் சசியையும் இணைத்து தவறான கதைகளை மோகனிடம் பரப்பி

## வாசிப்பில்.....

ஒரு டெனிஸ் நாட்டுப் பெண் என் குருப்பில் இருக்கிறாள். அவள் என்னைப் பார்த்து " உன் மனதில் ஆசை ஏற்படுவதில்லையா?" என்று கேட்டாள்.

" என்ன ஆசை என்று திருப்பிக் கேட்டேன்"

" ஆணோடு சேர வேண்டும் என்ற ஆசை"

நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு எளிதாகக் கேட்டுவிட்டாள். உண்மையை சொல்லுவதா வேண்டாமா என்ற ஒரு தயக்கம். உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமா? உங்கள் மனதில் எப்படி ஒரு பெண்ணை அடைய வேண்டும், அவளோடு உடலுறவு கொள்ள வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறதோ அதே போல பெண் மனதிலும் ஆணை அடைய வேண்டும் என்று ஏற்படுகிறது. நான் ஒரு இந்தியப் பெண். உண்மையைத் தெரியப்படுத்த எமக்குப் பயிற்சி கொடுக்கப்படுவதில்லை. 'சத்யமேவ ஜயதே' வாய்மையே வெல்லும் என்று ஊரறியப் பறை சாற்றுகிறோம். அந்த அறிவிப்பிலேயே நம்முடைய காரியம் முடிந்துவிட்டதாக நினைக்கிறோம். நாங்கள் ஆசைக்கு அடிமைகளாவதில்லை. என்று பதில் சொன்னேன் அவளுக்கு.

**அர்த்தநாரீஸ்வரர் நாவலிலிருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார்கள். இதனால் மோகன் இருவர் மீதும் சந்தேகப்பட்டான். சந்தேகம் எப்படிப்பட்ட மனிதனையும் மிருகமாக்கி விடுமல்லவா. மோகன் மட்டும் என்ன விதிவிலக்கா? சசி தன்னை காதலிப்பதாக நடித்து ஏமாற்றி இருக்கிறாள் என்று எண்ணினான். முன்பு போல் அவள் மீது பாசம் காட்டுவதில்லை. எந்நேரமும் எரிந்து விழுந்தான். போதைவஸ்து எப்படி இருக்கும் என்று துளி கூட தெரிந்திராத அவன் முதல் முறையாக நன்றாக குடித்துவிட்டு வந்து வீட்டில் கும்மாளம் அடித்தான்.

மோகனின் இந்த திடீர் மாற்றம் சசிக்கு அச்சத்தை உண்டு பண்ணியது. காரணம் புரியாது தவித்தாள். அன்று கண்ணா சசியை பார்க்க வந்திருந்தான். அன்றும் மோகன் வழமைபோல குடித்துவிட்டு தள்ளாடியபடி வந்தான். கண்ணாவுக்கும் வியப்பாக இருந்தது. சசி வெட்கித் தலை குனிந்தாள். "சசி என்ன இது?" கண்ணா கேட்க

"இப்ப கொஞ்ச நாளாவே இவரு இப்படித்தான்" என்று கூறி கண்ணீர் சிந்தினாள்.

"மிஸ்டர் மோகன்... என்ன இது? எவ்வளவு நாளா இந்தப் பழக்கம்... இது உங்களுக்கு அழகாக இருக்கா" என்றான்.

"என்னை கண்டிக்க நீ...நீ யாருடா? உனக்கும் எனக்கும் என்னடா சம்மந்தம்? நீ மட்டும் என்ன யோக்கியமானவனா? எனக்கு புத்தி சொல்ல வந்துட்ட... ஆ..." என்றான் மோகன்.

கண்ணாவுக்கு ஆத்திரம் பொங்கியது இருந்தாலும் அடக்கிக் கொண்டு " மோகன் வார்த்தைகளை அளந்து பேசு" என்றான்.

"என்னடா உங்கிட்ட எனக்கு பேச்சு... உன்னை பத்தி எனக்கு எல்லாமே தெரியும். மரியாதையா சொல்லுறேன். இனி நீ இந்த பக்கம் எட்டிப்பார்க்கக் கூடாது. வெளியே போடா நாயே" என்று மோகன் அவனை கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளி கதவை தாளிட்டான். சசி தடுமாறினாள்....

"என்ன காரியம் செய்துட்டீங்க... உங்க குடி போதையில் உங்களுக்கு அவர கூட தெரியாம போச்சா" என்று சசி கூற

"என்னடீ சொன்ன"

"பளார்" அவள் அழகிய கன்னத்தை அவன் கை பதம் பார்த்தது.

"ஆமாண்டீ..." அவன் இங்க கால் வச்சான் உன்னையும் அவனோட சேர்த்து கண்டதுண்டமா வெட்டிப் போட்டுருவேன். "பாரு ஜாக்கிரதை" என்று உறுமினான். அந்த வலியோடு மேலும் அங்கு நிற்காது சசி கட்டிலில் போய் சாய்ந்தாள்.

நாட்கள் தன்பாட்டில் நகர்ந்தன. மோகனின் அட்டகாசங்களும் துன்புறுத்தல்களும் அதிகரித்தே கொண்டு போனது. இப்போதெல்லாம் குடித்துவிட்டு தன் சகாக்களையும் கூட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்தான். அவர்களுக்கும் உணவு பரிமாறச்சொன்னான். அவர்கள் முன்னாலேயே "என்னாடீ கறி வச்சிருக்க... சாப்பாடா இது" என்று அவள் முகத்தில் எறிவான் சிகரட் நெருப்பால் அவள் அழகிய முகத்தில் சுடுவான். அவள் புழுவாய் துடிதுடித்துப் போவாள். பட்டினியோடு படுக்கையில் சாய்ந்து விடுவாள். எல்லாம் தான் கண்ணாவுக்கு செய்த துரோகத்தின் பிராயச்சித்தம் என்று எண்ணி தன்னையே நொந்து கொள்வாள்.

சுவரில் தொங்கிய அலாரக்கடிகாரம் மணியடிக்கும் ஓசை கேட்டு சுய நினைவுக்கு திரும்பியவள் கடிகாரத்தைப் பார்த்தாள் நேரம் நள்ளிரவு பன்னிரெண்டு மணியை காட்டியது. கதிரையை விட்டெழும்பியவள் ஏதோவொரு முடிவுக்கு வந்தவளாக படுக்கை அறைக்குள் நுழைந்தாள். அங்கே மோகன் நன்றாக தூங்கிக் கொண்டிருந்தான். ஒரு பெருமூச்சு விட்டவள் திரும்பி மற்றொரு அறைக்குள் நுழைந்து அங்குள்ள மேசை லாச்சியை திறந்தாள். உள்ளே கிடந்த தூக்க மாத்திரைகள் சிலவற்றை தன்வாய்க்குள் போட்டுவிட்டு தண்ணீரை மடமடவென அருந்தி விட்டு வந்து மோகனுடன் படுத்துக்கொண்டாள்.

மறுநாள் விடிந்து கதிரவனின் ஒளிக்கற்றைகள் ஜன்னலினூடே வந்து மோகனின் கண்ணில் பட்டதும் விழித்தெழுந்தவன் தன் மனைவி இன்னும் உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு தட்டி எழுப்பினான். அவள் முகம் துவண்டு விழுந்ததைக் கண்டு திடுக்கிற்றான். "சசி...சசி" தலையில் நெஞ்சில் கைவைத்து பார்த்தான் "ஐயோ சசி" அந்த வீடே அதிரும்படி அலறினான். அவன் போட்ட கூச்சலில் அக்கம் பக்கத்தார் ஓடி வந்தார்கள். புயல் வேகத்தில் விடயம் பரவியது. சசி வீட்டார் உட்பட கண்ணாவும் ஓடி வந்து சேர்ந்தான். சசியின் உயிரற்ற உடலை கட்டிப்பிடித்து கதறினான். "என்ன காரியம் பண்ணிட்ட மோகன்" என்று ஆத்திரத்துடன் கண்ணா அவன் சேட்டைப்பிடித்து குலுக்கினான். "என்னை மன்னிச்சிடு கண்ணா" என்று இறைஞ்சினான் மோகன். இந்த உத்தமிக்கு நீ செய்த பாவத்துக்கு நான் மட்டுமல்ல தெய்வமே கூட உன்ன மன்னிக்காது நீயெல்லாம் ஒரு மனுசனா என்று கூறிய கண்ணா உரிமையுடன் சசியின் உடலை அடக்கம் பண்ணுவதற்கான ஏற்பாட்டில் ஈடுபட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனம்

**வகை:** நாவல் **தலைப்பு:** திசை அறியாப் பயணங்கள்

**எழுதியவர்:** சீமான் பத்திநாதன் பர்ணாந்து **விமர்சிப்பவர்:** அலெக்ஸ் பரந்தாமன்

**கா**லங்கடந்தாயினும், அக்கால நிகழ்வைப் பிரதிபலிப்பதே இலக்கியப்படைப்பு எனலாம். ஒரு தொடக்கமும் முடிவும் எழுத்துக்களாய் விரிவடைந்து படைப்பாக்கம் கொள்ளும்போது அப்படைப்பை வாசிக்கும் வாசகன், அதற்குள் பலவிடயங்களைக் கண்டடைந்து கொள்கிறான்.

**ஈ**ழ இன விடுதலைப்போராட்டத்தின் ஆரம்பகாலப் பகுதி எப்படி இருந்திருக்கும் என்பதை அதைக் கடந்து வந்த பலரும் மறந்திருக்கக் கூடும். இன்றைய தலைமுறையினருக்கும் அது தெரியாமலும், அறிவதில் ஆர்வம் இல்லாமலும் இருக்கலாம்.

**எ**ண்பதுகளின்பின் மிகவீரியமாகத் தோற்றம்பெற்ற போராட்ட இயக்க அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்து, தெளிவாக அதேசமயம் உண்மைத்தன்மையுடன் எழுதுவதற்கான சுதந்திரமும் சூழ்நிலைகளும் எந்தவொரு எழுத்தர்களுக்கும் சரிவர அமையப்பெறவில்லை.

**ஆ**னால், போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, ஆயுதங்கள் மெல்ல மௌனிக்கப்பட்ட பின்பு, அன்றைய நிகழ்வுகள் பலவும் எழுத்துருவாக்கம் பெற்று, இப்போது படைப்புகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

**இ**வ்வாறு வெளிவந்த படைப்புகளில் ஒன்றுதான் மன்னார் - வங்காலையைச் சேர்ந்த சீமான் பத்திநாதன் பர்ணாந்து அவர்கள் எழுதியிருக்கும் 'திசையறியாப் பயணங்கள்' எனும் நாவலாகும். து. ஜெரோமி மார்க் என்பவரது கருத்துள்ள அட்டைப்படத்துடன், நூற்றியாறு பக்கங்களோடு வெளிவந்திருக்கும் இந்நாவலை 'ஒருகாலத்தின் பிரதிபலிப்பு' என்றே கூறலாம். இந்த நாவலுள் வரும் காலநிகழ்வுகள் வெறும் புனைவல்ல... என்பதை இந்நாவலை வாசிக்கும் இன்றைய தலைமுறை வாசகரைவிட, எண்பதுகளில் வாழ்ந்தவர்களால் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

**போ**ர்முடிவுக்கு வந்து பத்துவருடங்களுக்கு மேலாகிவிட்ட இன்றைய நிலையில், ஆரம்பகால இயக்க அமைப்புகளுக்கிடையே நடைபெற்ற கருத்து மோதல்கள்... படுகொலை நிகழ்வுகள்... இராணுவ அச்சுறுத்தல்கள்... மக்களிடையே நிலவிய பயப்பீதிகள்... துப்பாக்கிதாரிகளின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள்... கைது செய்யும் படலங்கள்... காணமல் போதல்கள்... காட்டிக்கொடுப்புகள்... இடப்பெயர்வுகள்... அவலச்சாவுகள்... சமூக சீர்கேடுகள்... என அனைத்தையும் தன்னுள் பதிவு செய்திருக்கிறது இந்த நாவல்.

**ம**ன்னாரில் நடைபெறும் ஒரு நிகழ்வாக இக்கதையினுள் பல மாந்தர்கள் வந்து போகிறார்கள். கருணாகரன் மற்றும் செல்லாச்சி என்பவர்களே பிரதான பாத்திரங்களாகின்றனர். விளிம்புநிலை மக்களின் வாழ்வியலை கதைக்கான கருவாகக் கொண்டு, அதனூடு இயக்க அமைப்புகளுடைய செயற்பாடுகளையும், அதன் நிமித்தம் இராணுவத்தால் பலி கொள்ளப்படும் பொதுமக்களின் அவலத்தையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. கதை மாந்தர்களிடையே பகிரப்படும் உரையாடல்கள்... மன எண்ணங்கள்... அவர்களின் வாழ்வியல் சூழலை தெளிவாக வெளிப்படுத்துகிறது. இதில் செல்லாச்சியின் சிந்தனைகளும் பேச்சுகளும்... அவள் மூலமாக ஒரு சமூகத்தின் நிலபரத்தை அறிய முடிகிறது.

குறிப்பாக -

**இ**யக்க அமைப்பொன்றுக்கு இரவுவேளை கிராமோதய சபைத்தலைவரின் வீட்டில் உணவு தயாரிக்கப் படுகின்றது. அவ்வேளையில், மாற்று இயக்கத்தவர்கள் சிலரும் வந்து தமக்கும் உணவு தரச்சொல்லி வாக்குவாதப்படுகிறார்கள். பின் உணவு வாங்கிக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். இதை அங்கு நின்று அவதானித்த ஓர் அப்பு தன் மகனிடம் (தலைவர்) கேட்கிறார்.

" தம்பி இவையளெல்லாம் ஆர்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இவையளெல்லாம் இயக்கப் போராளிகள்."

" துவக்கெல்லாம் வைச்சிருக்கிக்கிறாங்கள்."
" சண்டைக்குப் போறவனுக்கு துவக்கு வேண்டாமோ?"

" ஆரோட சண்டை?"

" ஆமிக்காரனோடை"

" ஏன் ஆமிக்காரனோடை சண்டைக்குப் போக வேணும்?"

" அது நம்மட ஆக்களின்ர உரிமைகளுக்காக சண்டை போடுகினம்."

" இப்ப சோத்துப் பார்சலுக்கல்லோ சண்டையாக் கிடந்தது" (பக். 43, 44). அப்பு கூறி முடிக்கிறார்.

அந்த ஆரம்பநாள்களில் 'சோத்துப் பார்சல்களுக்கு' பிரச்சனைப்பட்ட அமைப்பு எது என்பதை தந்தை - மகன் உரையாடலூடாக இங்கே வாசகனுக்கு வெளிப்படுத்தப்படும் விதம் அருமை. இதேவேளை, இயக்க அமைப்புகளுக்கிடையே நிலவிய ஒற்றுமையின்மை... இறுதியில் விபரீதமாகவே முடியும் என்பதையும் அந்த அப்புவினூடாகவே சொல்லப் படுகிறது.

" பார் நம்ம பயலுகளுக்குள்ளே ஒற்றுமையில்லை. எப்படி வெற்றி கிடைக்கும்? தோத்துப் போவாங்க. அதுவரைக்கும் ஆளை ஆள் அடிச்சுக்கொண்டு சாவாங்க..." எவ்வளவு தீர்க்க தரிசனமான வார்த்தை!

நாவலின் தொடக்க நகர்வில் வீட்டினில் சட்டத் துக்குப் புறம்பாகச் சாராயம் விற்கும் மாமி முறையான செல்லாச்சி, தன்னிடம் தவறாக நடந்து கொள்ள முனையும் கருணாகரனை விரட்டிவிட்டு, இறுதியில் அவனை இராணு வத்திடமிருந்து மீட்டெடுப்பதற்காக இராணுவ அதிகாரி மற்றும் ஊரவர்கள் முன்னிலையில், அவனைத் தனது கணவன் எனக்கூறி, காப்பாற்றி விடுகிறாள். இந்தத் தொடக்கத்துக்கும் முடிவுக்குமிடையில் நடைபெறும் நிகழ்வுகள்... மிகவும் துயரமானவை.

இரவுநேரம்... குழிநண்டு பிடிக்கப்போகும் செல்லாச்சியின் கணவன் மேக்கேல். இவனோடு கூடப்போன சந்தந்தோணி... என்பவர்கள் காணாமல் போதல்... இராப் பொழுதில் துப்பாக்கி இளைஞர் சிலருக்கு அடைக்கலம் கொடுக்கும் பங்குத்தந்தை, மறுநாள் காணாமல் போவதோடு, அங்கு தங்கியிருந்த இளைஞர்கள் இனந்தெரியாத சில நபர்களால் சுட்டுக்கொல்லப்படுதல்... கருணாகரன் வீட்டில் நாடகமன்ற அங்கத்தவர்கள் கூடியிருந்து, குடித்து கும்மாளமடிக்கையில் இராணுவத்தினர் வந்து எல்லோரையும் 'ட்ரக்' வண்டியில் ஏற்றிக்கொண்டுபோய், அடித்துத் துன்புறுத்திவிட்டு... மீண்டும் கொண்டுவந்து அச்சுறுத் திவிட்டு விடுதல்... இச்சம்பவத்தைப் பார்த்தபின், கருணாகரனின் கடைசித்தம்பி இயக்கத்துக்குப் போய் சேருதல்..

இயக்க இளைஞர்களுக்குச் சமைத்துக் கொடுத் ததன்மூலம் இராணுவத்தால் அச்சுறுத்தப்படும் கிராமோதயத் தலைவர், பின்பு அச்சம் காரணமாக சமைத்துக் கொடுக்க மறுக்கும் பட்சத்தில், ஓர் இரவு ஒதுக்குக்குப்புறமொன்றில் சாப்பாடு பெற்றுக் கொண்டவர்களாலேயே 'துரோகி' என்ற பட்டத்துடன், சுட்டுக் கொல்லப்படுதல்...இராணுவச் சுற்றிவளைப்பின்போது, கருணாகரனின் இரண்டாவது தம்பியும் கைது செய்யப்படல்...தான், மனதளவில் விரும்பும் நபரை (கருணாகரன்) தனது தாயோ(செல்லாச்சி) தவறான நடத்தைக்குப் பயன்படுத்துதல் கண்டு, கடிதம் எழுதி வைத்துவிட்டுத் தலைமறைவாகும் செல்லாச்சியின் மகள் சூசன்...அடிக்கடி ஊர்சுற்றிவளைக்கப் படுவதால், அவதியுறும் மக்கள்...இதனால் ஊரில் வாழப்பிடிக்காமல் இடம்பெயரும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இது கடல்மார்க்கமாக தமிழகம் நோக்கிய பயணமாகவும் நிகழ்கிறது. கருணாகரனும் செல்லாச்சியும் தமிழகம் செல்ல முடிவெடுக்கின்றனர். ஊரைவிட்டு வள்ளம்மூலம் தமிழகத்துக்குப் புறப்படுகையில், வள்ள ஓட்டியான அத்தாங்குட்டி என்பவன் வள்ளத்தில் வைத்து அளவுக்கதிகமாக மது அருந்துகிறான். இதனால் வள்ளத்துக்குள் பெரும் ரகளை ஏற்படுகிறது. இந்நிலையில், இயற்கையின் சீற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் வள்ளம் கவிழ்ந்து கொள்ள அனைவரும் கடலில் மூழ்குகின்றனர்.

மறுநாள் திட்டுப்பகுதியொன்றில் ஒதுங்கிக்கிடந்த சடலங்களுள் கருணாகரனும் செல்லாச்சியும் ஒன்றென... வாசித்துக்கொண்டு கடக்கையில், கலங்கி விடுகின்றன கண்கள். ஒரு புனைவற்ற... மெய்நிகழ்வாக மிக எளிமையான மொழிநடையோடு நகருகிறது இந்நாவல். திசையறியாப் பயணம்... ஒரு காலத்தை நாம் கடந்துவந்த... மறுத்துரைக்க முடியாத கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஞ்சரி சிறுகதைகள்

## ஒரு பார்வை

செ. யோகராசா

மஞ்சரி 24

### அவளும் நானும் - கர்ணன் சின்னத்தம்பி

புலம்பெயர் எழுத்தாளரது தாயக ஏக்கம் என்ற விதத்தில் தன்னால் மறக்க முடியாத தனது கிராமத்து மனிதர்களை சிருஷ்டித்து தனது எழுத்துக்களில் நடமாடவிடும் இவரது சிறுகதைகள் வரிசையில் இதுவுமொன்று எழுத்தில் முதிர்ச்சி தெரிகின்றது. அநாவசியமாக கதையை நீட்டிச்செல்லாமலும் சுருக்காமலும் எழுதியிருப்பது பாராட்டுக்குரியது.

### அன்பு என்பது - கமலினி கதிர்

மிருகங்களை வைத்து அவ்வப்போது எழுத்தாளர் சிலர் சிறந்த சிறுகதைகளை எழுதி வருகின்றனர். எஸ் நடேசன் நாயொன்றைப் பாத்திரமாக்கியும் 'சாரங்கா' பூனையொன்றை பாத்திரமாக்கியும் மறக்கமுடியாத சிறுகதைகளை எழுதியிருப்பது இச்சிறுகதையை வாசிக்கும்போது நினைவிற்கு வருகின்றது. மேலும் செதுக்கியிருப்பின் அவ்வரிசையில் இச்சிறுகதையும் சேர்ந்திருக்கும். இறுதிப் பகுதியை தவிர்த்திருக்கலாம் என்று கூறத்தோன்றுகிறது.

### கோண(ற்)ப் பார்வைகள் - ஆர்த்திகா சுவேந்திரன்

கூடுதலாக உரையாடலைப் பயன்படுத்தி கதையை நகர்த்தி வெற்றி பெற்றவர்கள் ஜானகிராமன், ஜெயகாந்தன் முதலான சிலரே இவ் எழுத்தாளரிடமும் அத்தகைய ஆற்றல் காணப்படுவது கவனத்திற்குரியது. தாய்- மகன் உரையாடலூடாக சிறுகதை உருவ அமைதிக்குச் சிதைவு ஏற்படாமல் இன்றைய தமிழ்ச் சமூகம் பற்றிய பல விடயங்கள் பேசப்பட்டிருப்பது வரவேற்கக் கூடியது.

### வேட்டை - மண்டூர் அசோகா

நந்தினிசேவியரின் சிறந்த சிருஷ்டியான வேட்டை சொந்த அனுபவம் சார்ந்தது. கேள்வி ஞானத்தை வைத்துக் கொண்டும் சிறுகதையொன்றைச் சிறப்பாக எழுத முடியுமென்பதற்கு நல்லுதாரணமாக இச் சிறுகதை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இச்சிறுகதையின் செல் நெறி பற்றி நண்பர் ஒருவருக்கு எடுத்துச் சொன்னபோது அவரிடமேற்பட்ட மனப் பாதிப்பு இச்சிறுகதையாளரின் எழுத்தாற்றலுக்கொரு சான்றாகின்றது என்பேன்.

### உழவு மாடு - காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

உழுகின்ற மாடு எங்கேயும் உழும் என்றாலும் இச் சிறுகதையிலும் நன்றாக உழத்தவறிவிட்டது. கதையின் இறுதிப்பகுதிக்கும் அதுவரை பேசப்பட்டவற்றிற்கும் தொடர்பு இருப்பின் அது தெளிவான முறையில் கூறப்படவில்லை. எமது கல்வியுலகின் அடிப்படைப் பிரச்சினைகளிலொன்று பற்றி உரையாடல் அமைந்திருக்கின்ற நிலையில் அதுவே கருவாகி உருவாகியிருப்பின் சிறப்பாக அமைந்திருக்கும்!

### குழம்புச்சோறு - அலெக்ஸ் பரந்தாமன்

முகாமையாளரின் மனிதநேயம் பெற்றோர் ஒழுங்காக வளர்க்காமை, சக தொழிலாளியின் செயற்பாடு, தமையனின் வரவு, என ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்கள் பேசப்படுகின்றமை இச் சிறுகதை 'முதல்வரைபு' என்று எண்ண வைத்துள்ளது. சோறு அடுப்பிலிருந்து அவசர அவசரமாக இறக்கப்பட்டுவிட்டது.

### மேலதிக குறிப்பு

இவ்விதழில் பெண் எழுத்தாளரொருவர் எழுதிய கதைத் தொகுப்பிற்கு பெண் எழுத்தாளர் எழுதிய விமர்சனம் தர்க்கரீதியான முறையிலும் கூர்மையான நோக்கிலும் நியாயமான கேள்விகளை எழுப்பும் விதத்திலும் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. சிறுகதை மஞ்சரி கவனத்திற்குரிய தொரு விமர்சனத்தை இனங்காட்டியுள்ளது (ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து குறிப்பிட்ட எழுத்தாளருக்கு அனுப்புவது விரும்பத்தக்கது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதை எழுதுவது எப்படி?

மு.தயாளன்

## உரையாடல் தொடர்ச்சி...

நீங்கள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் நின்று சிறுகதை எழுதவேண்டி இருந்தால் உரையாடல் மூலம் கதையைக் கொண்டு செல்லல் இலகுவாக இருக்கும். உதாரணமாக என்னுடைய சிறுகதைகளை எடுத்துக் கொண்டால் நான் எப்பொழுதும் கதைகளை ஆகக்கூட ஆறு பக்கங்களுக்குள் அடக்க எண்ணுவதுண்டு. உரையாடல்கள் மூலமாகப் பல விடயங்களை இலகுவாக வெளிப்படுத்தலாம். என்னுடைய புளியமரம் சிறுகதைத் தொகுப்பில் உள்ள புளியமரம் என்கின்ற கதையில்

பின்வருமாறு உரையாடல் வருகிறது.

சுதாகரனின் உடையைப் பார்த்து பக்கத்தில் இருந்தவர் கேட்கிறார்.

“ தம்பி வெளிநாடோ?”

சுதாகரன் மெதுவாகச் சிரித்தபடி

“ ஓம் நான் லண்டன்”

“ அப்ப தம்பியிட்டை நல்ல காசிருக்கும்”

சுதாகரன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

இந்த உரையாடலில் “ ஓம் நான் லண்டன்” என்று கூறியதும் அந்த மனிதர் சாதாரணமாக “ எப்பிடி லண்டன்?” என்று கேட்டிருக்கவேண்டும். ஆனால் அப்படிக் கேளாது “ அப்ப தம்பியிட்டை நல்ல காசிருக்கும் என்ற பதில் வருகிறது. உரையாடலின் போக்கினை மாற்றியதன் ஊடாக லண்டனில் இருப்பவர்கள்பற்றி ஊரிலுள்ளவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்ற செய்தி வருகிறது. இதுதான் உரையாடல் முறையின் சிறப்பு. மிகப் பெரிய செய்தியையும் ஒரு வசனத்தால் வாசகர் மனதில் செலுத்திவிடலாம். இது மிகச் சிறியதாக இருந்தாலும் விரைவாக அந்தக் காட்சியின் நோக்கத்தை அநாவசியமான வசனங்கள் இன்றி அமைப்பது இலகுவாக உள்ளது.

## கருப்பொருள்

சிறுகதை என்பது ஒரு பாத்திரத்தின் கணநேரப் படப்பிடிப்பு எனலாம். அந்தக் கதையின் பிரதான பாத்திரத்தின் கணநேரத் தோற்றம் ஆகும். இப்படிச் சொல்வதன் மூலம் கதையில் கரு இல்லை என்றில்லை. சிறுகதையில் கரு என்பது தொடர் சம்பவங்கள் என்பதோடு பிரதான பாத்திரம் அந்த சம்பவங்களினூடாகப் பெறும் அனுபவம் என்று சொல்லலாம். அந்த அனுபவங்களின் உடாகப் பெரும் பிரச்சினைகளைத் தீர்க்கும் விதமாகக் கதையின் முடிவு அமைந்திருத்தலும் அவசியமாகும்.

கதை நகருகையில் சில ஆச்சரியங்களையும் வியப்புகளையும் புகுத்தல் நன்று. இல்லையெனில் கதை நேர்கோட்டில் பயணிக்கும் சம்பவங்களின் பயணமாக இருக்கும். இதனைப் பெரும்பாலான வாசகர்கள் விரும்புவதும் இல்லை.

உதாரணமாக ஒரு கதையில் ஒருவர் ஒரு குற்றம் இளைக்கிறார். பின்பு குற்றம் கண்டு பிடிக்கப்பட்டு அது தீர்த்து வைக்கப்படுகிறது ஆயின் இவ்வளவும் மட்டுமே கருவாகி விடாது. இதை முழுமையான கருவாக்கவேண்டுமாயின் குற்றம் கண்டு பிடிக்கும் பாதையில் சில வியப்புகளையும் வாசகன் புருவத்தை உயர்த்துமளவுக்குச் சொல்ல வேண்டும். வாசகன் அந்தப் பாத்திரம் இந்தக் குற்றம்தான் செய்திருக்க வேண்டுமென்று அனுமானித்துக் கொண்டிருக்கும் போது அது இல்லை என்றவாறு இடையில் கதை மாறிச் செல்லவேண்டும். அப்படிப் போகும்போது வாசகன் திரும்பவும் கதையோடு ஒன்றி திரும்பவும் கண்டுபிடிக்கப் புறப்படுவான். இப்படிச் செய்யும் போதுதான் கதை சுவராசியமானதாவும் வாசகர் மத்தியில் பிரபலமானதாகவும்மாறும்.

(இன்னும் வரும்...)

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. KUGAN
72, 2nd LANE
ANANDAPURI
TRINCO


LUXMI EDUCATION CENTRE

# LEC

## ENROLLING NOW
2022 / 2023



**REGISTER NOW**

www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science


**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org